# ஞானச்சுடர்

கார்த்திகை 2022

299ஆவது மலர்




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



**ஓர்ந்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்**
**பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.**

**பொருள் :** தான் கற்றவற்றைச் சிந்தித்து மெய்ப்பொருளை நன்றாக அறிந்தவனுக்கு மறுபடியும் பிறவி வராது. இது உறுதி. (357)

**பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்**
**செம்பொருள் காண்ப தறிவு.**

**பொருள் :** பிறவிக்குக் காரணமாகிய அறியாமை நீங்கும்பொருட்டு வீட்டிற்குக் காரணமாகிய மெய்ப்பொருளைக் காண்பதே மெய்யுணர்வாம். (358)

# நற்சிந்தனை

***மறப்பேனோ குருநாதன் தன்னை***

## ரங்கநின் திருவருள் தரலாகாதா

இராகம் - காபி தாளம் - ஆதி



**பல்லவி**

ரங்கநின் திருவருள் தரலாகாதா (ஸ்ரீ)

**அநுபல்லவி**

தேசகாலம் யாவும் மறந்து
தேவா உன்றனருள் நிறைந்து (ஸ்ரீ)

**சரணங்கள்**

பாதகன் கஞ்ச னனுப்பிய பூதகி
பாரில் மாளவே செய்தாய்
அதுபோல் அடியேன் ஆணவமொழிய
அருள்நீ தருவாய் ஐய (ஸ்ரீ) 01

வேத புராணம் காணவொண் ணாத
வித்தகனே பக்தர் வேண்டும்
விமலா அமலா கமலக் கண்ணா
விரைவாய் நீ வருவாய் (ஸ்ரீ) 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்



வெளியீடு
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 299

## 2022 பொருளடக்கம் கார்த்திகை


| | | |
|---|---|---|
| இடர் களைந்து எம்மவர்... | கே.எஸ். சிவஞானராஜா | 01 - 02 |
| திருவாசகத்திற் தமிழ் | முருகவே பரமநாதன் | 03 - 09 |
| இறைவனுடன் நேரில்... | மூ. சிவலிங்கம் | 11 - 12 |
| கந்தபுராணமும் ஈழத்து... | த. செல்வசோதி | 13 - 17 |
| திருமூலர் தவமொழி | ஆ.தா.இ. ஜெயபாலன் | 18 - 20 |
| மெய்ஞானமும் விஞ்ஞானமும் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 21 - 22 |
| ஆனந்த சாகரம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 23 - 25 |
| சங்கிலி திருமணம் | கு. சிவபாலராஜா | 26 - 29 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 30 - 31 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 32 - 35 |
| உறவுகள் மேம்பட | சி. நற்குணலிங்கம் | 36 - 38 |
| வைகுண்ட ஏகாதசி | ஆர்.வீ. கந்தசுவாமி | 39 - 40 |



**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

மனிதராகிய நாம் உடலாலும், வாக்காலும், மனத்தாலும் புரியும் ஒவ்வொரு காரியமும் அவனது மனத்தின்கண் இருந்தே வெளிவருகின்றது. என்றைக்காவது ஒருநாள் எமது மன எண்ணங்களின்படி செயற்பட்டு அதன்மூலம் வரும் இன்ப துன்பங்களை நாம் அனுபவிக்கிறோம்.

உலகில் பிறக்கும் எல்லா மனிதர்களும் அறிந்தோ அறியாமலோ சில பாவங்களைச் செய்பவர்களாகவே இருக்கிறோம். ஒவ்வொருவரினதும் வேறுபட்ட சூழ்நிலைகளின் காரணமாக எமது மனத்திற்கு விருப்பமற்ற பாவ காரியங்களை தவிர்க்கமுடியாமல் செய்கின்றோம். ''பாவம் செய்வதால்த்தான் மனிதன் பிறக்கின்றான்'' என வேதநூல் கூறுகின்றது.

நாம் ஒவ்வொருவரும் வாலிப வயதில் அறியாமல் செய்யும் பாவங்களின் காரணமாக முதுமைப் பருவத்தில அப் பாவங்களின் வினை வந்து நம்மை வருத்துகின்றது. இந்துமதம் பாவம் பற்றிய பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்றன. அதில் நாம் முன்னர் செய்த பாவங்களின் வினையை நிச்சயம் அனுபவிக்க வேண்டும். அப் பாவங்களின் வினைகளை அனுபவிக்காமல் விடுபட வழியே இல்லை என்ற கருத்து ஒரு சாராரிடம் அன்றுதொட்டு இருந்தே வருகின்றது. இன்னும் ஒருசாராரிடம் எல்லாப் பாவ வினைகளில் இருந்தும் விடுபட பிராயச்சித்த முறைகள் உண்டு எனவும், அவ் ஒவ்வொரு பாவத்திலிருந்தும் விடுபட தனித்தனியே முறைகள் வகுத்துள்ளது என்றும் கூறுகின்றனர்.

தற்கால மனோதத்துவ ஆராய்ச்சியின்படி பாவங்களை அகற்றும் வழியாக நமது மனத்தில் இருக்கும் பாவம் பற்றிய எண்ணக் கருத்துக்களை மனத்தின்கண் இருந்து முழுமையாக அகற்றிவிட வேண்டும். அவ்வகை எண்ணங்கள் எமது மனதில் தோன்றாது இருக்கவும் வழிசமைக்க வேண்டும் என்றும் கூறுகின்றது. இவ்வாறு உலகில் மனிதராகப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் பாவ காரியங்களைச் செய்யாமல் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வாழ முயற்சிப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

| | |
|---|---|
| S. சதாசிவமூர்த்தி | (கனடா) |
| K. கனகசபேசன் | (கனடா) |
| உரிமையாளர் | (E.S.P. நாகரெட்ணம் அன்கோ, யாழ்ப்பாணம்) |
| ச. ஜெயதாசன் | (கருகம்பனை, காங்கேசந்துறை) |
| திருமதி தங்கராசா சரஸ்வதி | (புலோலி மேற்கு) |
| ச. வைத்தியநாதக்குருக்கள் | (கந்தவனக்கடவை, பொலிகண்டி) |
| உரிமையாளர் | (சிவா பிரதேர்ஸ், யாழ்ப்பாணம்) |
| மா. ஞானலிங்கம் | (ஆசிரியர், அபிராமி மகால், அச்சுவேலி) |
| க. தங்கராசா | (ஜெயகணேசா ஸ்ரோர்ஸ், பருத்தித்துறை) |
| சி.வ. முருகையா | (ஆசிரியர், பரராஜசேகரப்பிள்ளையார் கோயிலடி, இணுவில்) |
| து. நாகேந்திரம் | (நல்லூர்) |
| S. மங்களரூபன் | (கல்வளை வீதி, சண்டிலிப்பாய்) |
| சின்னையா ரஞ்சிதமலர் | (மல்லாகம்) |
| த. கணபதிப்பிள்ளை | (உடுப்பிட்டி) |
| கி. பகவத்சிங்கம் | (இளை. அதிபர், நீர்வேலி) |
| ம.க. ஸ்ரீதரன் | (கரவெட்டி) |
| இ. தம்பிரத்தினம் | (முருகேச பண்டிதனார் வீதி, சுண்ணாகம்) |
| திருமதி P. குகதாசன் | (K.K.S. வீதி, இணுவில்) |
| P. நமசிவாய | (அல்வாய் மத்தி) |
| இ. சிவராசா | (கரவெட்டி கிழக்கு) |
| சி. விஜயகுமாரன் | (உரும்பராய்) |
| தி. ஸ்ரீராகவன் | (வியாபாரிமூலை, பருத்தித்துறை) |
| செல்வநேசன் கஜன் | (கல்வளை வீதி, சண்டிலிப்பாய்) |
| க. பரராஜவிருந்தம் | (காவில், கரணவாய்) |
| சு. தில்லையம்பலவனார் | (இளை. விவாகப் பதிவாளர், புத்தூர்) |
| கந்தசாமி கதிர்காமத்தம்பி | (மல்லியோடை, வல்வெட்டி) |
| K. மகேந்திரன் J.P. | (நவந்தபதி, இமையாணன்) |
| திரு செந்தில்நாதன் | (கொக்குவில் கிழக்கு) |
| R. பத்மா | (சுண்டுக்குளி) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| கே.எஸ். ஆனந்தன் | (இணுவில்) |
| வைத்திலிங்கம் உதயமலர் | (கரணவாய் தெற்கு) |
| யோகராசா குமார் | (ஆலடி வீதி, மட்டுவில் கிழக்கு) |
| அ. தில்லைநாதன் | (சிவன்வீதி, ஆவரங்கால்) |
| செ. பாலச்சந்திரன் | (K.K.S. வீதி, யாழ்ப்பாணம்) |
| சுபத்திரா விவேகானந்தன் | (அளகொல்லை, அளவெட்டி) |
| த. சந்திரசேகரம் | (நாகர்கோவில்) |
| கனகலிங்கம் மயூரன் | (பாரதிவீதி, அச்சுவேலி) |
| ச. வதனி | (நீர்வேலி மேற்கு) |
| மு. பாலசிங்கம் | (சுண்ணாகம்) |
| நீ. மயில்வாகனம் J.P. | (வருணன், அச்சுவேலி) |
| T.N. இராஜா | (பொன்கிளர், சங்கானை) |
| சோதிரட்ணம் அனுஷியா | (அரசடி சந்தி, நவாலி) |
| செ. உமாபதி | (பிராமண வீதி, தும்பளை) |
| V. சந்தனத்தேவன் | (தூதாவளை, கரணவாய்) |
| ஐயாத்துரை நடராசா | (சிவசிதம்பரம் வளவு, கரவெட்டி) |
| S. செந்தூரன் | (மாருதி இல்லம், மாறாப்புலம், அல்வாய்) |
| திருமதி தயாநிதி சுசிகலா | (தெல்லிப்பழை) |
| செ. சுப்பிரமணியம் | (யாழ்ப்பாணம்) |
| A. பிரதாபன் | (சந்திரபுரம், உடுவில்) |
| வை. இராசேந்திரம் | (இணுவில்) |
| C.H. புவனேஸ்வரி | (மானிப்பாய்) |
| திருமதி ஆறுமுகம் உமாதேவி | (பண்ணாகம், சுழிபுரம்) |
| திருமதி கிருஷ்ணகுமாரி கனகசிங்கம் | (உடும்பராய்) |
| V.S. மருதலிங்கம் | (அரசடி சந்தி, மானிப்பாய்) |
| அ. பாலேஸ்வரி | (கதிரிப்பாய், அச்சுவேலி) |
| செல்வி க. கமலாம்பிகை | (ஆதவன் ஸ்ருடியோ, மீசாலை) |
| க. திருச்செந்தூர் | (வீரப்பதிராஜன், கரணவாய்) |
| K. தங்கவேலாயுதம் | (பருத்தித்துறை) |
| சிவகுரு குகதாசன் | (செல்வமதி, ஆவரங்கால்) |
| வ. தம்பையா | (கலட்டி வளவு, புலோலி மத்தி) |
| மோகன் புவனா | (புத்தூர்) |
| திருமதி செல்வநாயகி ஞானசுந்தரம் | (செங்குந்தா வீதி, கரவெட்டி கிழக்கு) |
| வைத்திலிங்கம் பிரபாகரன் | (துரைவீதி, கொக்குவில்) |
| திருமதி பிரதீபன் பிரதீபா | (அச்சுவேலி) |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடர் களைந்து எம்மவர் வாழ்வில் சுடரேற்றும் அற்புத விரதம் கார்த்திகைச் சோமவாரம்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

சிவபெருமானை நினைந்து, தவவாழ்வு பெறும் முகமாக விரதமனுட்டித்து, பார்வதி சமேத எம்பெருமானாக சிவநாமங்களால் பாடியும் ஆடியும் நாடியும் அப் பெருமானை மகிழ்வித்து, பாமலர்களோடு பூமலர்களால் அர்ச்சித்து, சகல சௌபாக்கியங்களையும் வரமாக நல்குமாறு, கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்து இரந்து இருந்து கேட்கும் அற்புத விரதமே சோமவார விரதமாகும். பஞ்சமா பாதகங்கள் அணுகாதவண்ணம் உள்ளும் புறமும் தூய உடம்பினராகவும் ஆசாரசீலராகவும் மெய்யது வெண்பொடி நீறணிந்து, ஓம் நமசிவாய சிவாயநம ஓம் என பஞ்சாட்சர நாமங்களை சதா உச்சரித்த வண்ணம், இல்லக் கடமைகளை நேர்த்தியாக நிறைவு செய்த பின்பு, தேங்காய், இளநீர் தீங்கனி, பழம், பாக்கு, வெற்றிலை, கற்பூரம், சாம்பிராணி, பத்திரபுஷ்பம் ஆகிய அருச்சனைப் பொருட்களோடு, பால், தயிர், நெய், திரி முதலாம் சதுஸ்ர மூலகங்களோடும் ஆலயம் அதுவும் சிவாலயம் சென்று வழிபடுதலானது சிவவரப்பேறளிக்கும் என்பது எமது புராண வரலாறாகும். பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானிடம், உம் கையில் எம்பிள்ளைகள் உமக்கே அடைக்கலம் என்று பரிந்து நாடி அடுத்த சந்ததி வாழ வும் நம் முன்னோர் சிக்கனப் பிடிக்கும் சிவவிரதமும் இதுவாகும்.



கார்த்திகை மாத சோமவார விரதம் சிவனுக்கு அதிவிஷேடமானதாகும். பன்னி ரண்டு வருடகாலமோ, ஆறு வருடகாலமோ, மூன்று வருடகாலமோ அது எதுவாயினும் மிக வும் பயபக்தியோடு உபவாசமிருந்து இவ் விரதத்தினை நோற்பவர்களுக்குச் சிவன் வேண்டத்தக்கது அறிந்து, வேண்டமுழுதும் தருவானாக காட்சியும் மாட்சியும் ஆட்சியும் பரிசாகக் கொடுப்பான்.

*நீ வெற்றியடைவதை உன்னைத் தவிர வேறு யாராலும் தடுக்கமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன் தக்கனது சாபத்தால் தனது 27 கலைகளையும் இழந்து தவித்து ஒற்றைக் கலையோடு வாழ்விழந்தபோது சிவனின் சோமவார விரதம் பூண்ட மகிமையால் மீண்டும் இழந்த கலைகளனைத்தையும் பூரணமாகிட அழியா வரம் பெற்று, சிவனின் திருமுடியிலே வளர்பிறையாகச் சிவனால் சூட்டப்பெற்றார்.

சீமந்தினி என்ற இராஜகுமாரி, தனது கணவனான சந்திராங்கதன் என்பவன் யமுனை ஆற்றிலே உயிரிழந்து, அவள் விதவையானபோது, சிவமுனிவரின் கட்டளையின் பிரகாரம் சோமவார விரதத்தை அணுவும் பிசகாதவண்ணம் நோன்பாக அனுட்டித்து, கணவனை உயிரோடு மீண்டும் பெற்றுத் தீர்க்க சுமங்கலி ஆனாள். கார்த்திகையில் திங்கள் தோறும் அருள் கொழிக்கும் இவ்விரதம் மேலும், மண - மனமுறிவு, வழக்குகள், குழந்தையின்மை, மரணபயம், அடிமை வாழ்வு, தொற்றும் நோய், தொற்றா நோய், வறுமை, இயற்கை, செயற்கை அனர்த்தம் யாவற்றினின்றும் மீண்டு பேரின்பப் பெருவாழ்வு அளிக்கவல்ல விரதம் என்பதாக!

## கடவுளிடம் இப்படித்தான் வேண்ட வேண்டும்!

மன்னன் ஒருவன் காட்டிற்குள் வேட்டையாடச் சென்றான். திடீரென மன்னன் அமர்ந்திருந்த குதிரை மட்டும் வெறிபிடித்து, காட்டிற்குள் மன்னனை எங்கெங்கோ இழுத்துச் சென்று, இறுதியில் ஒரு குழிக்குள் தள்ளிவிட்டுச் சென்றது. அந்த நேரத்தில் அங்கு வந்த கிராமத்து வாசிகள் 4 பேர் மன்னனைக் காப்பாற்றி பரிவாரங்களுடன் சேர்த்தனர்.

மன்னன் அந்த 4 கிராமத்து வாசிகளையும் அரசவைக்கு அழைத்து, விருந்து உபசரிப்பு செய்து மகிழ்ந்தான். இறுதியாக அரசவையை விட்டு கிளம்பும் நேரத்தில், "உங்களுக்கு என்ன வேண்டும்" என்று மன்னன் அந்த கிராமத்து வாசிகளிடம் கேட்டான்.

அதற்கு முதல் கிராமவாசி தனக்கு ஒரு மாடு வேண்டுமென்றான். இரண்டாமவன் நிலம் வேண்டும் என்றான். மூன்றாமவன் அழகான பெண்ணை திருமணம் செய்து வைக்க வேண்டும் என்றான். அவர்கள் கேட்டபடியே மன்னன் அவர்களுக்குச் செய்து வைத்தான்.

நான்காமவனிடம் "என்ன வேண்டும்...?" என்று மன்னன் கேட்க, அதற்கு அவன் "தங்களைக் காப்பாற்றிய அந்த நாளை ஒரு திருநாளாக நினைத்து, ஒவ்வொரு வருடமும் நீங்கள் என் வீட்டிற்கு வருகை தரவேண்டும். என்னோடு ஓரிரு நாட்கள் தங்கி இருந்து சிறப்பிக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டான்.

அவன் கேட்டுக்கொண்டபடியே ஒவ்வொரு வருடமும் அந்த கிராமத்திற்கே மன்னன் செல்ல ஆரம்பித்தான். மன்னன் செல்வதற்காக அந்த கிராமத்திற்கு சாலை வசதி செய்யப்பட்டது. அதன் பின்னர் மன்னன் தங்கியிருக்கும் நாட்களில் குடிநீருக்காக அந்த கிராமத்திற்கு குடிநீர் வசதி செய்துகொடுக்கப்பட்டது. மன்னன் தங்குவதற்காக அரண்மனை கட்டப்பட்டது. இந்த இளைஞனின் நற்குணத்திற்காக மன்னன், தன் மகளை மணமுடித்து வைத்தான். ஆண் வாரிசு இல்லாத அந்த மன்னன் அந்த இளைஞனுக்கு முடிசூட்டி வைத்தான்.

நாமும், மன்னனிடம் முதல் மூன்றுபேர் கேட்டமாதிரியே இறைவனிடம் பொன், பணம், ஆபரணங்கள் என கேட்கின்றோம். நான்காமவன் போல நாமும் இறைவனிடம் "என்னோடு வந்து தங்கியிருங்கள்" என்று பிரார்த்தித்தால், நாம் கேட்டதும் கிடைக்கும். அதோடு நமக்கு தேவையான சகலதும் பெற்று பெருவாழ்வு வாழலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகத்திற் தமிழ்

- முருகவே பரமநாதன் அவர்கள் -

"இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்" பிங்கலந்தை நிகண்டு. மொழி எண்ணத்தைப் பகிர்ந்துகொள்ள ஏற்பட்ட கருவி. தொடர்பாடல் ஊடகம் எனலாம். நீர்மை இயல்பு. தண்ணீருக்குக் குளிர்மை இயல்பு. நீர்மை ஒழுங்கான இயல்பு. மொழியப்படுவது மொழி. "மொழிவதற மொழி" என்பது ஔவைக் கூற்று. எழுதப்படுவது எழுத்து. எங்கள் (தாய்மொழி) தமிழ். என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே. (திருமந்திரம் 81) என்பது திருமூலர் வெளிப்பாடு. தமிழ் செய்தல் என்றால் அன்பு செய்தல் என்று பொருள், இன்னோர் அர்த்தம் ஆகமத்தைத் தமிழில் மொழி மாற்றம் செய்தல். இத்திருமூலரே தான் எழுதிய திருமந்திரங்களை மூலர் தமிழென முத்திரை பொறித்துள்ளார்.

மூலன் உரை செய்த மூவாயிரம் தமிழ்
மூலன் உரை செய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரை செய்த முப்பது உபதேசம்
மூலன் உரை செய்த மூன்றும் ஒன்றாமே.

-திருமந்திரம் 3046.

இத் தமிழ் என்ற பாவனை மொழிக்கு மட்டுமன்றி இம்மொழியில் இயன்ற பக்தி இலக்கியங்களில் வரும் (பதியம்) பதிகங்களின் நிறை வெண்பாடல்களில் வரும் (முத்திரைக் கவிதை, பலச்சுருதி) பாசுரங்களைத் தமிழ் எனப் பேசும் வழக்காற்றை ஆழ்வார் பாசுரங்களிலும்; சம்பந்தர், சுந்தரர் திருவாக்கிலும் காண்கிறோம். இம்மரபையொட்டித் தேவாரங்களைத் தமிழ் மூதாட்டி தமிழெனப் பாடியுள்ளார்.

தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவா சகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென்று உணர்.

-நல்வழி 40.

மூவர்- அப்பர், சம்பந்தர், சுந்தரர். இவர்கள் பாடியருளியவை தேவாரம். முனிமொழி வியாசர் தந்த பிரம்ம சூத்திரம் வசன நடையைக் கத்தியவடிவம் எனவும் பாவியத்தைப் பத்திய வடிவமெனவும் ஆன்றோர் அழைப்பர்.

மொழி இறைவனால் ஆக்கப்பட்டதென்பர். இதுபற்றிப் பாவாணர் கூற்றையும் மூப்பு நோக்குவோம். "மொழி இறைவனால் ஆக்கப்பட்டதன்று; தனியொருமனிதனால் ஆக்கப்பட்டது மன்னு கழிபல ஊழிகளாகக் கணக்கற்ற தலைமுறைகளால் ஆக்கப்பெற்றது. பாவாணர் (தேவநேயப்)

பேராசான் சுந்தரம்பிள்ளையவர்கள் தமிழின் தொழுமையினைப் பாடியுள்ளார்.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினு மோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பது போல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந் துளுவும்
உன்னுதரத்துதித் தெழுந்தே ஒன்று பல ஆயிடினும்
ஆரியம் போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே.

-மனோன்மணியம்.

என்றுமுள தென்றமிழெனப் போற்றப்படும் தமிழைக் குறுமுனிக்குச் சொன்னவர் முருகன். அதை மேருகிரியில் பொறித்தவர் பிள்ளையார்.

முத்தமிழ் அடைவினை முற்படுகிரிதனில்
முற்பட எழுதியமுதல் வோனே.

-திருப்புகழ் 1.

செம்மொழியாம் தமிழைச் சந்தக் கவிதோறும் சிந்தியவர் திருப்புகழாசிரியரே இதை ஒண்தீந்தமிழென்றார் குமரகுருபரர்.

தொடுக்கும் கடவுள் பழம்பாடல்
தொடையின் பயனே நறைபழுத்த
துறைத்தீந்தமிழின் ஒழுகு நறுஞ் சுவையே

-மீனாட்சி பிள்ளைத்தமிழ் வருகை9.

தமிழின் தனிச் செவ்வியை மீனாட்சி பிள்ளைத்தமிழைப் புரட்டி அனுபவியுங்கள். இவ்வணம் பாரகாவியம் நிறைந்த தமிழன்னையின் அதியுயர்ந்த நூல்களிலொன்று திருவாசகமெனப் பாடிவைத்துள்ளனர்.

வள்ளுவர்நூல் அன்பர்திருவாசகம் தொல்காப்பியமே
தெள்ளுபரி மேழலகர் செய்த உரை - ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம் தொகுசித்தி ஞானம்
தண்டமிழின் மேலாந் தாம்.

தொண்டர் புராணம் - பெரியபுராணம், சித்தி- சிவஞானசித்தியார்; ஞானம்- சிவஞான போதம் மணிமொழிப் பிரானைக் குருபரர்- திருந்திய அன்பன் பெருந்துறைப் பிள்ளையும் என இனம் காட்டினார். இந்நோக்கில் தேவாரம் தமிழையே பதிகமாகக் காட்டினர். ஆழ்வாராதியரும் அம் மரபைப் பேணினர். பக்தி இலக்கியப் பாதையிற் திருவாசகம் முன்னுரிமை பெற்றிருக்கிறது. ஒரு ஒப்பீட்டுப் பார்வையிற் திருவாசகத்தின் விசேஷம் சிந்திக்கப்படுகிறது இவ்வாக்கத்தில்.

முதற்கண் அப்பர் பெருமானின் தமிழ் இறைந்த பாவடிகளை நோக்குதும். தோத்திரமும் சாத்திரமும் சிவனே என ஒரு பிள்ளையார் சுழி போடுவார் நாவேந்தர்.

தோத்திரமும் சாத்திரமும் ஆனார் போலும்

-6:78:5.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமொழியும் தென் மொழியுமவனே. எல்லாமேயோர் புதுப்பார்வை.

வானவன் காண் வானவர்க்கும் மேலா னான்காண்
வடமொழியும் தென்தமிழும் மறைகள் நான்கும்
ஆனவன் காண்.
-6:87.1.

செந்தமிழோ பாரியனைச் சீரியானைத்
திருமார்பிற் புரிவெண்ணூல் திகழப்பூண்ட
அந்தணனை ஆவடுதண் டுறையுள் மேவ
அரனடியே அடிநாயேன் அடைந்துய்ந்தேனே
ஆரியன் - சிவன் -6:46.10.

மூவர் வாழ்விலே சில அற்புதங்கள் நிகழ்ந்தன. அஃது அவர்களின் பாட்டுத் திறத்தாலேதான் நடந்தது.

தொண்டர் நாதனைத் தூதிடைவிட்டதும் முதலை
உண்ட பாலனை அழைத்ததும் எலும்பு பெண்ணுருவாக்
கண்டதும் மறைக்கதவினைத் திறந்ததும் கன்னித்
தண்டமிழ்ச் சொலோ மறுபுலஞ் சொற்களோ சாற்றீர்.
-திருவிளையாடற் புராணம்.

மூல நோய் தீர்க்கும் முதல்வன் கண்டாய்
முத்தமிழும் நான்மறையும் ஆனான் கண்டாய்.
-6:23.6.

ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்
அண்ணா மலையெம் அண்ணல் கண்டாய்.
-6:23.5.

தமிழ் மறைக்கே இருக்கும்படியான விசேஷம். அது ஏழை எளியவர் எல்லாருக்கும் புரிகிறது அல்லவா. திருஞான சம்பந்தருக்குத் தமிழாகரன் என்றோர் பெயர் இருப்பதைப் பெரியபுராணம் சுட்டிக் காட்டுகிறது. உடம்பே தமிழாக இருப்பவன் தமிழாகரன்.

பந்தமறுத் தாளாக்கிப் பணிகொண் டாங்கே
பன்னியநூல் தமிழ்மாலை பாடுவித் தென்
சிந்தை மயக்கறுத்து.
-6:84.4.

பத்திமையாற் பணிந்தடியேன் தன்னைப் புன்னாள்
பாமாலை பாடப் பயில்வித்தானை.
-6:54.3.

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோ டிசைபாடல் மறந்தறியேன்.
-4:1.6.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிச் சுந்தரர் வாக்கில் இருந்து சில பாவண்ணத் தமிழைப் பார்ப்போம்.

நற்றமிழ்வல்ல ஞானசம்பந்தன்
நாவினுக் கரையன் நாளைப் போவானும்
-7:55.4.

நாளும் இன்னிசை யால்தமிழ் பரப்பிய
ஞானசம் பந்தனுக்கு.
-7:62.8.

பாவணத் தமிழ்பத்தும் வல்லார்க்குப்
பறையும் தாம் செய்த பாவந்தானே
பறையும் விட்டு நீங்கும்
-7:55.10.

திணைகொள் செந்தமிழ் பைங்கிளி தெரியும்
செல்வத் தென்திரு நின்றி யூரானே.
(திணை கொள் செந்தமிழ் ஐந்திணைக்கும் உரிய பண்ணை அறிந்து பாடும்)
-7:45.2.

செந்தமிழ்த்திறம் வல்லிரோ செங்கண்
அரவம் முன்னிலையில் ஆடவே.
-7:254.

அல்லியந் தாமரைத்தார் ஆரூரன்
உரைத்த தமிழ் மாலை.
-7:34.10.

பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்
பழத்தினில் சுவை ஒப்பாய்
-7:48.6.

பண்ணின் தமிழ் இசைபாடலின் பழவேய் முழவு அதிர
-7:60.7.

ஏழிசை இன்தமிழால் இசைத் தேத்திய பத்தினையும்
-7:84.10.

நாவலூரன் வன் தொண்டன் நற்றமிழ்
பாதம் ஓதவல்லார் பரனொடு கூடுவா
-7:13.10.

பொன்மாலை மார்பன் புகழ்க்காழிச் சம்பந்தன்
நன்மாலை ஞானத்தமிழ்
-நம்பியாண்டார் நம்பி.

சைவமும் தமிழும் தழைக்க அவதரித்த ஞானசம்பந்தரின் திருமுறைகளில் இருந்து சில.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழர் தெய்வமறை நாவர்செழு நற்கலை தெரிந்தவவரோ
டந்த மல்கு குணத்தவர்களர்ச்சனைகள் செய்ய அமர்கின்ற அரனூர்
-3:80.3.

நகைமலி தண்பொழில் சூழ்தருகாழி நற்றமிழ் ஞானசம்பந்தன்
தகைமலி தண்டமிழ் கொண்டிலை யேத்தச் சார்கிலாவினைகளே.
-1:44.11.

மறை வளரும் தமிழ்மாலை வல்லவர் தந்துயர் நீங்கி
நிறைவளர் நெஞ்சின ராகி நீடுலகத்திருப்பரே.
-2:67.11.

மிக்கரஞ்சீரக் கழுமலமே கொச்சைவயம்
வேணுபுர மயனூர் மேலச்
சக்கரஞ்சீரத் தமிழ்விரகன் தான் சொன்ன
தமிழ் தரிப்போர் தவஞ் செய்தோரே.
-2:73.12.

உரை தெரிந்துணருஞ் சம்பந்த னொண்தமிழ் வல்லார்
நரை திரை இன்றியே நன்னெறி சேர்வரே.
-3:33.11.

அப்பர் பெருமானும் மணிவாசகரும் பதிகப் பயன்- முத்திரைக் கவிதை பாடினதாய் இல்லை. நூற்பயன் கூறும் மரபு வடமொழியில் இருப்பதுபோலத் தென்மொழியிலும் நடைமுறையில் பக்தி இலக்கிய சகாப்தத்தில் இருந்தது. இந்நூன்மரபு ஆழ்வார் பாசுரங்களிலும் அமைந்துள்ளது திருநாலாயிரத்திலும் பதிகப்பயன் இடம்பெற்றிருக்கிறது.

விட்டு சித்தன் விரித்த தமிழ் வல்லார்
குழலை வென்ற குளிர் வாயினராகிச்
சாது கோட்டியுள் கொள்ளப்படுவாரே.
-பெரியாழ்வார் திருமொழி 3:6.11.

புதுவையர் கோன் கோதை தமிழ்
ஆகத்து வைத்து ரைப்பார் அவரடியார் ஆடுவரே.
-நாச்சியார் திருமொழி 9:10.

ஆவினையன் றுயக்கொண்ட ஆயரேற்றை
அமரர் கள்தந் தலைவனை அந்தமிழ் இன்பப்பாவினை.
-பெருமாள் திருமொழி 1:4.

சீரமன்னு செந்தமிழ் மாலை வல்லார்திரு
மாமகள் தன்னருளால் உலகில்
தேர்மன்ன ராயொலி மாகடல் சூழ்செழு
நீருலகாண்டு திகழ்வார்களே.
-பெரிய திருமொழி 2.9.10.

*நம் எதிர்காலத்தை நாமே உருவாக்குகிறோம். அதை விதி என்கிறோம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்மாறன் சடகோபன், சொல்
வழுவிலாத வெண்தமி
ழ்கள் ஆயிரத்துளிப்பத்தும்
தழுவப் பாடியாட வல்லார் வைகுந்த மேறுவரே.
-திருவாய் மொழி 4:7.11.

இதுவரை சைவ வைணவ பாரம்பரிய வழக்காற்றிற் தமிழின் மதிப்புப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி இருப்பதை மேலோட்டமாகக் கண்டோம்.

இவ்விலக்கிய வரிசையில் உலகம் போற்றும் திருவாசக ஆசிரியர் தமிழை ஒரேயொரு இடத்தில் மட்டும் பாவித்துள்ளார்.

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல் காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணாமலை யானைப் பாடுதுங்காண் அம்மானாய்.
-திருவாசகம் 8.10.

பாண்டிய மன்னனின் ஆட்சியில் முக்கிய பங்களித்த ஆளுடையடிகள் வரலாற்றின் மைய இடமே மதுரைதான். பாண்டிய நாட்டின் தலைநகர் மதுரை. இங்கே சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தவர்கள் பாண்டியர்கள்.

மதுரையிலே 64 திருவிளையாடல்கள் நடந்தன. முச் சங்கம் வளர்த்த தமிழை அவ்வையார் சங்கத்தமிழ் என மதித்தார். "கண்ணுதற் பெருங்கடவுளும் கழக மோடமர்ந்து பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழ் ஏனை மண்ணிடைச் சில இலக்கணவரம்பிலா மொழி போல் எண்ணிடப் படக்கிடந்ததா எண்வும் படுமா" எனப் பரஞ்சோதியார் தமிழின் ஏற்றத்தைப் பாடியுள்ளார். வில்லிபுத்தூர் ஆழ்வாரும் தென்னன் வளர்த்த தமிழின் செவ்வியைப் பாடியுள்ளார்.

பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்து
இருப்பிலே இருந்து வைகை ஏட்
டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர்
நினைவிலே கடந்து ஓர் என
மருப்பிலே பயின்றபாவை
மருங்கிலே வருகின்றாள்.
-பாரதம்.

பாண்டித்தமிழ் மேலானது. யாழ்ப்பாணத்துத் தமிழும் பேச்சுமெழுத்தும் ஒன்றாய் அமைந்த பெருமையுடையது. வாதவூர் அடிகள் பாண்டித்தமிழைப் போற்றியவண்ணம்

*முட்டாளைச் சமாளிக்க சுருக்கமான வழி மௌனமாக இருப்பதுதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்ப்பாவண்ணம்தான். பாட்டின் பயனைச் சிவபுராணத்தின் இறுதியிலே மட்டும் கூறிய அவர் இறைவனே தன்னைப் பாடவைத்தான் என்பதையும் உணர்த்தியுள்ளார். திருவாசகத்தின் ஊடகமே தமிழ்தான். வடமொழி இலக்கியத்தில் எழுந்த நூல்களை மூல மொழியிற் படித்தாற்றான் பூரண விளக்கம் பெறலாம். சட்டத்தைப் படிக்க லத்தீன் படிப்போம். எனவேதான் ஃபாதர் போப் அவர்கள் திருவாசகத்தை தமிழிலே படித்து கண்ணீர்விட்டு அழுதார். காரணம் ஊடகம் தமிழ்தான். தமிழிலே எழுந்த திருவாசகம் தமிழிலே படித்துத்தான் மேலைநாட்டவர் அழுதனர். எனவே தமிழ்தான் திருவாசகத்தின் ஊடகம் என்பதை நாம் உணர்வோமாக.

"தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

## வந்த வினை போய்விடுமே பறந்தோடி!

*பல்லவி*

அழகொழுகும் சந்நிதியில்
ஆற்றங் கரைதன்னில்
அழகன் முருகன் வந்து
கோவில் கொண்டான்! அந்தச்
சிங்கார வடிவேலன்,
செகம் போற்றும் உமைபாலன்
சிறப்பான கோவில் கொண்டே
எமை ஆள்வான்!
(அழகு)

*அநுபல்லவி*

கள்ளமிலாப் பக்தரெலாம்
வெள்ளமெனத் திரண்டு வந்து
வள்ளல் பதம் போற்றிடுவார்
வணங்கி நின்று!
புள்ளி மயிலும் வந்து
துள்ளி நடம் புரிந்திடுமே!
வேலவனின் திருத்தலத்தில்
மனம் மகிழ்ந்து! (அழகு)

*சரணம்*

செந்தமிழ்க் கடவுள் எங்கள்
கந்தனை நினைந்துருகி
வந்தனை செய்பவரோ
பல கோடி!
சந்ததமும் அவனைத் தம்
சிந்தைகளில் நினைப்பவர்க்கு,
வந்த வினை போய்விடுமே
பறந்தோடி!

- ஸ்ரீ. குலசேகரன் -

ஆசையும் ஏக்கமும் செல்வத்தைச் சேர்க்காது. உழைப்பே செல்வத்தைத் தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனுடன் நேரில் தொடர்புகொண்ட இறையருட் செல்வர்களர் வரிசையில் பாம்பன் குமரகுருபர சுவாமிகள்

– திரு மு. சிவலிங்கம் அவர்கள் –

செந்தமிழ் நாட்டின் தென்பகுதியிலமைந்த புண்ணிய பூமியாம் இராமேஸ்வரத்தில் வாழ்ந்த சாந்தப்பிள்ளையும் செங்கமலத்து அம்பாளும் செய்த முற்றவப் பயனாக 1850இல் அவதரித்தவர் சுவாமிகள். இவருக்குப் பெற்றோர் சூட்டிய திருநாமம் "அப்பாவு". இக்குடும்பம் நெடுங்காலமாகப் பாம்பன் திருவூரில் வசித்ததால் இவர் பாம்பன் சுவாமிகள் என அழைக்கப் பெற்றார்.

இவர் அவ்வூரிலுள்ள கிறிஸ்தவ பாடசாலையிற் கற்றவர். இக்காலத்தில் அவ்வூரிலுள்ள சிவாலயத்தில் நடைபெற்ற பெரும் திருவிழாவுக்காகச் சென்றார். இவர் கோயில் வாசலில் சென்றபோது இறைவனால் ஈர்க்கப்பெற்று "சிவ சிவ" என்று கூறியவாறு சிவ சிந்தனையுடன் தரிசித்து வீதிவலம் வந்தார். சிவசிந்தனை மேலிட இல்லமேகினார். தம்மை இறைசிந்தனையில் நாட வைத்த சிவபெருமான்மீது கேசரபாதமாக முதற் பாடலைப் பாடினார்.

சுவாமிகள் சிறுவயதினில் கந்தசஷ்டி கவசத்தை நன்கு மனனஞ் செய்தவர். நாள்தோறும் முப்பத்தாறு முறை கந்தசஷ்டி கவசத்தைப் பாராயணஞ் செய்யும் பேறு பெற்றவர். இவர் சிவனால் ஈர்க்கப்பெற்று அவர்மீது பாடல் பாடியதைத் தொடர்ந்து நெஞ்சில் உறைந்திருந்த முருகன்மீது பாடல்களைப் பாட முன்வந்தார். இதன் நோக்கில் தமது பனந்தோப்பிலுள்ள பனையோலைக் குருத்தெடுத்துச் சட்டங்களாக்கி ஏடுகளாகப் பயன்பெற எடுத்து வைத்திருந்தார்.

ஒரு புனிதமான வெள்ளிக்கிழமை கையில் ஏடுகளும் எழுத்தாணியும் கொண்டு கீழ்த் திசை நோக்கி அமர்ந்தார். முருகனை உளமாரப் பிரார்த்தித்தார். எழுதத் தொடங்குமுன் "எனது ஆண்டவராகிய குமரப்பெருமானே பாடியே அறியாத யான் நின்னையே பல பாக்களாலும் பாடக்கடவேன். அருணகிரிநாதர் பெயரை வைத்தே பிரபந்தம் முடிக்கக் கடவேன்" என இறைவனை வேண்டினார். "கங்கையைச் சிறையிற் பறித்து" என்ற தொடரில் அழகிய சொற் பிரவாகமாகப் பாக்கள் உருவாகின. அன்றைய தினம் முதற் பாடல் எழுதப்பட்டது.

இதன் பின் நாள்தோறும் ஒரு பாடல் பாடிய பின்பே நீராகாரம் மற்றும் காலை உணவை ஏற்கும் நியதியைப் பெற்றார். இவரின் பாடலின் பெருமையை அறிந்து அவ்வூர் சேதுமாதவ ஐயர் தைப்பூச நன்னாளில் திருஆறெழுத்து மந்திரத்தை உபதேசஞ் செய்தார். பின்னொரு நாள் சமயப் பெரியார் வடிவில் வந்த முருகப்பெருமான் இவரின் கனவிற் தோன்றி இவரை ஒரு மண்டபத்திற்கு அழைத்துச் சென்று பாற்சோற்றைப் பிசைந்து தன் கையால் சுவாமிகளுக்குக் கொடுத்தார். சுவாமிகள் ஆவலுடன் உண்டபோது தாமும் உண்டருளி னார். இதன் பின் சுவாமிகளுக்குப் பாடல் புனையும் திறனும் வடமொழி நூல்களின் ஞான

*மனிதனின் இயற்கையான குணம் சிறப்பாகச் சிந்திப்பதாகும்.*

உணர்வும் மிகுந்தது. சுவாமிகள் ஒருநாள் பாதணி அணியாது கட்டாந்தரையில் நடந்து சென்றார். பாதையில் இருந்த நெருஞ்சிமுள்ளொன்று காலில் குத்திவிட்டது. வேதனை தாங்காது முருகா என்று கூறி வருந்தினார். முருகன் தமது பக்தனான தச்சுத்தொழிலாளி ஒருவரின் கனவில் தோன்றினார். சுவாமிகளின் தோற்றத்தையும் காட்டி இவரின் காலுக்கு அளவான பாதக்குறடு ஒன்றை உடனடியாகச் செய்து இவரைத் தேடிச் சென்று கொடுக்குமாறு கூறி மறைந்தருளினார். அத்தொழிலாளி முருகன் இட்ட பணியை நிறைவேற்றினார்.

சைவசமயத்தவருக்காக நீதிமன்றத்தில் ஏற்பட்ட வழக்குக்காக முருகன் அருளை வேண்டி நேரிற்தெரிபட்டு வழக்கை வெற்றிபெறச் செய்தார். இவர் துறவு நோக்கத்துடன் கூறிய பொய்க்காக இவரைப் பழநிக்கு வரவேண்டாமென முருகன் ஆணையிட்டார். ஆன்ம லாபம் வேண்டிய பொய்க்காக தமது பிழையை உணர்ந்து "துறவு நோக்கம்" பிழை பொறுக்க முறையீடு "சிறுமை நீக்குயர் செல்வம்" ஆகிய பதிகங்களை முருகன்மீது பாடினார்.

சுவாமிகள் காஞ்சிபுரத்திலுள்ள பல கோயில்களைத் தரிசித்துவிட்டுத் திரும்பும்போது ஒரு இளைஞன்போல வந்த முருகன் "குமரகோட்டம்" எனும் கோயிலையும் காண்பித்து வழி படச் செய்து அருள்பாலித்தார்.

சுவாமிகள் தமது 41ஆம் வயதில் இராமேஸ்வரத்தின் சூழலில் உள்ள பிரம்பன் வலசை என்ற மயானத்தில் தாம் அமைதியுடன் தவஞ்செய்வதன் பேரில் ஒரு ஆழமான சதுரக்குழி வெட்டி "குமரகுரு, குமரகுரு" என்று கூறியபடி தியானத்தில் இருந்தார். அச்சமயம் பேய்கள் வந்து சுவாமிகளுக்கு இடையூறு செய்தன. அவர் ஆறெழுத்து மந்திரத்தை ஓதிப் பேய்களை விரட்டினார். தொடர்ந்து சுவாமிகள் ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்தபோது ஏழாம் நாள் அருணகிரிநாதரும் அகத்தியரும் உடன் நிற்கப் பழநி முருகன் காட்சி கொடுத்து உப தேசித்தருளினார். 35ஆம் நாள் தவநிலையிலிருந்து எழுந்தார். அன்று சித்திரா பௌர்ணமி தினமாகும். சதுரக்குழியில் முருகன் செய்த உபதேசத்தை "தகராலய இரகசியம்" என்னும் நூலாக வெளியிட்டார்.

ஒரு நாள் சுவாமிகள்மீது பேரன்புமிக்க நயினார்பிள்ளை என்பவர் உணவிற்காக அழைத்திருந்தார். சுவாமிகள் அவ்விடஞ் சென்றிருந்தார். அன்று நயினார்பிள்ளையின் மகன் ஒரு மூட்டுப்பூச்சியை நசித்துக் கொன்றுவிட்டார். இதனைக் கண்ட சுவாமிகள் இவ்வீட்டில் ஒரு இழவு நடந்துள்ளது என்று கூறி அன்று உணவை ஏற்க மறுத்துவிட்டார். மறுநாள் அவ் வீட்டில் உணவருந்தி அவர்களைத் திருப்திப்படுத்தியதுடன் ஜீவகாருண்யம் என்னும் பொருளில் நல்லுபதேசமுஞ் செய்தார்.

1902இல் சுவாமிகள் காசிக்குச் சென்றபோது குமரகுருபரர் மடத்துப் பெரியாரிடம் காவி உடை வாங்கித் தரித்துக்கொண்டார். பின்னர் சித்திரத்துட் சித்திரம் வரைந்து சிதம்பரத்தில் சித்திரப் பாடல்களைப் பாடினார். மேலும் முருகனின் திருத்தலங்களை அகரவரிசையில் அமைத்து முருகனின் பெருமை வாய்ந்த "சண்முககவசம்" என்னும் நூலை எழுதினார்.

1923இல் சென்னை வீதியில் நடந்து செல்லும்போது குதிரை வண்டிச் சில்லொன்று மோதியதில் இவரது இடது கணுக்கால் எலும்பு முறிந்தது. சுவாமிகள் மருத்துவமனையிற்

*யாருடைய குறைகளை எண்ணிவிட முடியுமோ அவரே உண்மையில் உயர்ந்த மனிதர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்க்கப்பட்டார். இவரைப் பரிசோதித்த மருத்துவர் உணவில் உப்புச் சேர்க்காது உண்பதால் காலைக் குணப்படுத்த முடியாதென்றார். இதனைக் கேட்டதும் சுவாமிகள் "முருகா கேவலம் இந்த உப்பால் ஆகக்கூடிய காரியத்தை உன் திருவருளால் நிறைவேற்ற முடியாதா?" என வேதனையுடன் விண்ணப்பித்தார்.

சிறிது நேரத்தில் சுவாமிகள் உறங்கிய கட்டிலருகில் இரு மயில்கள் வந்து நோயுற்ற காலைத் தமது தோகையால் வருடின. இதனை உணர்ந்து கண்விழித்த சுவாமிகள் மயில்களின் அற்புதத்தைக் கண்டதும் "முருகா" என்றார். மயில்கள் மறைந்ததும் ஒரு சிறுவன் வந்து கட்டிலில் அமர்ந்து ஊறுபட்ட காலை இலேசாக வருடவும் கால் குணமடைந்தது. உடன் எழுந்திருந்தவர் அங்கிருப்பது முருகன் என அறிந்து அச்சிறுவனை வணங்கினார். அச்சமயம் முருகனான சிறுவன் மறைந்தருளினார். சுவாமிகளின் கால் குணமடைந்ததை அறிந்த மருத்துவர் இறையருளை வியந்தார்.

பாம்பன் சுவாமிகள் 30.05.1929 அன்று சமாதியடைந்தார். மறுநாள் இவரது வித்துடல் சமாதி வைக்கப்பட்டு முறைப்படி சமாதிக் கருமங்கள் நடைபெற்றன. சுவாமிகளின் வரலாற்றையும் சமாதி நிலையை அறிந்த உள்ளூர் வெளியூர் அன்பர்கள் சுவாமிகளின் பெருமையை யாவரும் அறியும் வண்ணம் பெரிய கோயிலும் கட்டி நகர அமைப்பில் சிறப்புக்களையும் செய்ய முன் வந்தனர்.

இப்பணியில் முன்னோடியாக ஓய்வுநிலைப் புகையிரதப் பகுதிச் சாரதியான இராமச்சந்திரன் என்பவர் இவரது சமாதிக்குழியை அன்று பார்த்ததும் பக்தியால் கவரப்பட்டார். சுவாமிகளின் நூல்களைப் பாராயணஞ் செய்து நற்பேறு பெற்றவர். இவர் முன் வந்து அயலிலுள்ள "இடையர்காடு" என்னும் சிறுகாட்டை வெட்டிச் சுத்தஞ் செய்து கோபுரமும் கோயிலும் சேர வெளியூர் அன்பர்களின் உதவியுடன் பாடசாலை, மருத்துவ நிலையம், கணனி நிலையம், கைத்தொழிற் பயிற்சி நிலையம் ஆகியவற்றை நிறுவினர். வருடாவருடம் பல முன்னேற்றப் பணி தொடர்கிறது. இவ்வறப்பணிகள் செய்து சுவாமிகளின் அறநெறி வாழ்வைத் தொடர்வதுடன் தம் பணியாக மேலும் பல அறப்பணிகள் செய்து சுவாமிகளின் தவக்கோல உருவ அமைப்பாகவே மாறியுள்ளார்.

இவரது அயராத அறப்பணி வாழ்வில் சுவாமிகளால் எழுதப்பட்ட 6666 பாடல்கள் வெளியிட்டு யாவரும் பயனடைய வைத்துள்ளார். இவர் பாம்பன் சுவாமிகள் மீதிருந்த பக்தியால் தாமும் தவவாழ்வுடன் அறப்பணியை அரவணைத்தார். இதன் பேறாக தென்னிந்திய மண்ணில் பாம்பன் சுவாமிகளின் பெயரால் பாம்பன் சுவாமி நகர் என்னும் ஆன்மிக நிறுவனம் யாவரையும் அரவணைக்கிறது.

---

*சேவை பணிகளில் ஈடுபட்டு மனிதன், இறைவனுக்குத் தனது கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். நீங்கள் யாருக்கு உதவி செய்தாலும் ஒரு சிறிது கடன் தீர்கிறது. மனிதனுக்கு உடல் அளிக்கப்பட்டிருப்பது அடுத்தவருக்குச் சேவை புரியத்தானே தவிர, சுகங்களை அனுபவிப்பதற்காக அல்ல! உண்மையான சேவகனே நியாயமான நாயகன்.*

*இடைவிடாத முயற்சியும் எப்போதும் மலர்ந்த முகமும் அறிவின் அறிகுறிகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராணமும் ஈழத்து கந்தன் திருத்தலங்களும்

– திரு த. செல்வசோதி அவர்கள் –

"ஆட்படு நெறியில் சேர்த்தும்
ஆதியின் ஊழ்தந்து உய்க்க
தாட்படை மயூரம் ஆகி
தன்னிகரில்லாச் சூரன்
காப்பு அடை உளத்தன் ஆகிக்
கடவுளர் கிரியல் போக
ஞாட்பு இயல் செருக்கில் வந்தான்
ஞான நாயகன் தன்முன்னம்.

(கந்தபுராணம் 493)

பூர்வத்தே சாகதீவரசன் புதல்வராயிருந்து "சுப்பிரமணிய சுவாமிக்கு" மயில்வாகனமாக வும், சேவற்கோழிக் கொடியாகவும் அடிமை செய்யவேண்டும் என்று எண்ணி சூரனும் பதுமனும் செய்த தவம் சூரன் மயிலாகவும் பதுமன் சேவற் கொடியாகவும் சேர்ந்து சூர பத்மன் ஆக வந்தனர். முருகனின் வேல் பட்டவுடன் சூரபத்மன் இருகூறுகளாகி ஆணவ வடிவமான சூரன் முருகனின் வாகனமாகவும் பதுமன் முருகனின் கொடியாகவும் ஆகினர். இந்த வகையில் முருகன் ஆலயங்களில் மகோற்சவ காலங்களில் சேவற்கொடி ஏற்றப்படுவதனை காணமுடிகிறது. அதுமட்டுமன்றி கந்தன் ஆலயத்தில் சூரசம்கார நிகழ்வின்போது முருகப் பெருமானது வெற்றிவேலாயுதம் பட்டவுடன் சூரபத்மனது மார்பு பிளந்து சேவலும், மயிலும் தோன்றுவதானது அற்புதமானது. முருகப்பெருமானது போராடல் மிக்க வெற்றிவேலாயுதமானது முருகனிடம் அமைந்த மூன்றாவது சக்தியான ஞானசக்தியாக விளங்குகிறது. இவ் வேலாயுதமானது ஆழ்ந்து அகன்று கூர்மையுடையதாய் திகழ்கிறது. அழகும் அறிவாற்றலும், அகலமும் கூர்மையுடையதாயும் அமைந்து காணப்படுகிறது. இதனாலேயே மணிவாசகப்பெருமான் "ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே" என போற்றிப் பாடியருளியுள்ளார். அதுமட்டுமன்றி "வேல்"ஐ வணங்குவதே வேலை" என சான்றோர் கூறியதும் கூறுவதும் பொருத்தமுடையதே.

ஞானசக்தி ஆகிய வேல் அருள் உருவம் கொண்டது. திருவருள் சக்தி வடிவமான வேல் முருகனின் திருக்கரத்தில் ஒளிர்கிறது. அது சிவனின் திருஞான ஜோதியாக திகழ்கிறது. அது அருள்வேல், ஞானவேல், சிங்காரவேல், சண்முகவேல், வெற்றிவேல், இரத்தினவேல், கதிர்வேல் என்றெல்லாம் போற்றப்படுகிறது.

மேலும் வெளிநாடொன்றில் வதியும் குழந்தைவேல் என்னும் அன்பர் தனது மகனிற்கு கல்யாணவேல் எனும் திருநாமத்தை சூட்டியுள்ளதும் பெருமைக்குரியதே. இதனை ஆவணம்

*தன் துன்பத்திலும் பிறர் நலனை நினைப்பவரே நல்லோர்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றினூடாக பார்வையிடக் கிடைத்ததும் கந்தனின் அற்புதமே. இந்தவகையில் கந்தபுராண வரலாற்றுடன் தொடர்புடைய பெயர்களை முன்னோர் சூட்டியுள்ளமை நோக்கற்பாலதே. "ஞானமாகிய முருகன்" மயில்மீது அமர்ந்துள்ளான். நெடுவேல் வஞ்சகர்க்கு வஞ்சனை செய்யும். மெய்யடியார்க்கு என்றுமே உதவும் துணை நிற்கும், வழிகாட்டும், அருள்புரியும். அது ஐந் தொழிலும் புரியும் என்பதனை அருணகிரிநாதரின் திருப்புகழில் காண்கிறோம்.

கண்ணாடியில் தடம் கண்டவேல் - தோற்றம் (படைத்தல்)

வீரவாகுதேவர், நக்கீரர் முதலிய அடியார்களை காத்தல் - ஸ்துதி (காத்தல்)

சூரபத்மன் போன்ற அசுரர்களை வதைத்தல் - சம்ஹாரம் (அழித்தல்)

அடியாரிடத்து வெம்மையை மறைத்து தண்ணளி சுரத்தலும், பகைவிரித்து தன்மையை மறைத்து வெம்மையை அளித்தலும் - திரோபவம் (மறைத்தல்)

கச்சியப்பசிவாச்சாரியார், அருணகிரிநாதர், ஔவைப்பிராட்டியார் போன்றோருக்கு நாவில் நலந்தருளியமை - அனுக்கிரகம் செய்தமை (அருளல்)

இந்தவகையில் ஐந்தொழில் புரிபவரான அப்பனான சிவபெருமானும் (நடராஜர்) சுப்பனான சுப்பிரமணியரும் ஒன்றே. அடியேன் சிறுவயதில் "சூரபத்மன்"ற்கு பயந்தோடி ஒழிந்தமை இன்றும் நினைவிற்கொள்வது அற்புதமே.

சிவபெருமானின் ஐந்தெழுத்து மந்திரத்திற்கு நிகராகவும் குறவர் குலமகளாகிய வள்ளியின் கருணை விழிக்கு நிகராகவும் இறைவனின் திருவடிகளிற்கு நிகராகவும் வெற்றி வேலாயுதத்தினை அருணகிரிநாத சுவாமிகள் ஒப்புமை செய்து பேருண்மையையும் வெளிப் படுத்தியுள்ளார். "உடம்பிடித்தெய்வம்" என கந்தபுராணம் போற்றும் வேலாயுதமே சுப்பிரமணியப் பெருமானின் "அஸ்திரதேவர்" ஆக அமைந்துள்ளார். மகோற்சவ காலங்களில் "அஸ்திரதேவர்" வீதிவலம் வரும்போதும், சுவாமி வீதிவலத்தின்போது "கட்டியம்" சொல்லும் போதும் சங்கு ஒலியும், சேமக்கல ஒலியும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இவ் ஒலிகள் மூலமாகவே அத்தனை தேவாதி தேவர்களும் சாநித்தியம் கொள்வார்கள். இந்தவகையில் முக்கியத்துவம் வாய்ந்த சங்கொலி, சேமக்கல ஒலி என்பன ஆலயங்களில் அருகி வருகின்றன. இவற்றை சுப்பிரமணியர் ஆலயமொன்றில் தீப்பந்தம் பிடித்து (தீவட்டி) சேமக்கல ஒலி, சங்குநாதம் வழங்கி சரியைத்தொண்டு புரிந்த திரு சி. சிவபாலசிங்கம் அவர்கள் ஓய்வுநிலை கிராம அதிகாரி போற்றப்படவேண்டியவரே. இவர் சிறுவயது முதல் சரியைத்தொண்டு புரிந்த விபரம் குறிப்பிட்டு சாதனமொன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த ஆலயத்தில் அவ் அதிகாரியை சந்திக்க நேர்ந்தபோது "கந்தன் வீதிவலம் வரும்போது சேமக்கல ஒலி, சங்குநாதம் வழங்க வேண்டும் என அவர் கண்ணீர் மல்க கூறியமையானது எம் நெஞ்சை நெருடியது. மேலும் எமது பேத்தியார் 39 ஆண்டுகள் (1961 - 2000) "புனித கைமை நோன்பு" இருந்து (கைம்பெண்கள் வெள்ளைச் சாறி அணிதல் எனும் மரபு- புனிதம்) அஸ்திரதேவருடன் வீதி வலம் வந்தமையும், சுவாமி வீதிவலம் வரும்போது நைவேத்தியம் வைத்து வழிபாடாற்றியமையும் அஸ்திரதேவர் ஆகிய வேலாயுத பெருமான் எமது பேத்தியாரை தன் அயலிலே, அருகிலே குடியமர்த்தி ஆறுதலளித்து அபயமளித்து எம்மை உயிர் காத்தமையும் (மார்கழி 1984)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் அவரை உபயமளித்தமையும் மறைக்கப்படவோ, மறுக்கப்படவோ முடியாத இறை உணர்வு அனுபவமே.

கோயில்களில் நிகழும் திருவிழாக்களில் முக்கிய இடத்தினைப் பெறுபவர் "அஸ்திர தேவர்" எல்லா மூர்த்திகளிற்கும் எல்லாக் கிருதயங்களுக்கும் ஏகப்பிரதிநிதியாய் திகழ்பவர் அவரே. படைத்தல், காத்தல், அழித்தல் எனும் முத்தொழில்கள் புரிபவரும் அவரே. தேர்த் திருவிழாக்களிலே சங்காரத்தை நடத்தி முடிப்பவரும் அவரே. தேர்த்திருவிழா மறுதினம் உற்சவ மூர்த்திகள் சமேதராய் அஸ்திரதேவர் புனித தீர்த்தோற்சவத்திற்கு எழுந்தருளுவார். இறைவன் அங்கு எழுந்தருளி தமது கிருபாகடாட்ச நோக்கினால் தீர்த்தத்துளை, தீர்த்தநீர் முதலியவற்றை திருவருள் மயப்படுத்திய பின்னர் அஸ்திரதேவர் தமக்குரிய அபிஷேக பூசை ஆராதனைகளை ஏற்று தீர்த்தமாடுவர். அவரைத் தொடர்ந்து பக்தர்களும் அடியார்களும் தீர்த்தமாடி இறைவனின் திருவருளுக்கு ஆளாவர். இந்தவகையில் தீர்த்தோற்சவம் அருளல் தெய்வீக செயற்பாட்டினை உணர்த்துவதனை அறிந்து கொள்ளலாம்.

முருகனின் முச்சக்திகளில் ஒன்றான இச்சா சக்தியின் வடிவமே குறவர் குலமகளாகிய வள்ளி. இவர் கரிய நிறமுடையவர். முருகனின் வலது பக்கத்தில் வீற்றிருப்பவர். கையில் தாமரை மலரை ஏந்தியிருப்பவர். போகியாய் இருந்து உயிர் காக்கும் போகத்தை அறிதலே இறைவன் தன்மை. இந்தவகையில் உலகின் இல்வாழ்க்கை நடத்தற்பொருட்டு முருகன் வள்ளியுடன் தன் திருமுகத்தாற் பேசி மகிழ்ந்து மலர்ந்திருக்கிறான். வள்ளியானவள் பக்குவப்பட்ட ஆன்மாவின் வடிவம். நான், எனது, எமது, எமக்குரியது, எம்முடையது என்ற ஆணவச் செருக் கற்று இறைவன் திருவடிகளில் சரணடைந்த தன்மை வள்ளியின் சிறப்பியல்புத் தன்மையாகும். இவ்வாறு வள்ளி பின்பற்றிய நெறியை "வள்ளி சன்மார்க்கம்" என்று போற்றுகிறார் அருணகிரிநாத சுவாமிகள்.

முருகனின் கிரியாசக்தியின் வடிவமே தெய்வேந்திரன் மகளான தெய்வயானை. இவர் செந்நிறம் வாய்ந்தவர். முருகனின் இடதுபக்கத்தில் வீற்றிருப்பவர். கையில் நீலோற்பவ மலரை (கருங்குவளை) ஏந்தியிருப்பவர். தெய்வயானை அம்மையை "மறுகில் கற்பில் வானுதல் கணவன்" என்று நக்கீரர் போற்றுகிறார். செயலாற்றும் திறன் மிக்கவர்கள் புகழ் விரும்பாது பெரிதும் அடக்கமாக இருத்தல் போல" தெய்வயானை அம்மை சிறப்புற்று இன்புற்று முருகனுடன் வள்ளிதேவசேனா சமேதராய் விளங்குகிறாள்.

வானுலகில் இருந்து "கச்சையிகல் கொங்கை"களை உடைய தெய்வயானையும், இவ் உலகிலிருந்து "பரஞானம் அபரஞானம் ஆகிய கொங்கை"களையுடைய குறவர் குலமக ளான வள்ளியையும் ஏற்று வள்ளி தேவசேனா சமேத சுப்பிரமணிய சண்முகப்பெருமான் வானுலகில் உள்ளோரும் இவ் உலகில் உள்ளோரும் தனக்கு முன்னால் சமமானவர்கள் என்பதனை மேற்குறித்த சிறப்பின்மூலம் உணர்த்தியுள்ளார். இதனை நாம் உணர மறுக்கிறோம். உணரவேண்டும். உணர இவர்களிற்கு இறைவன் அருள்புரிய வேண்டும். அதுமட்டுமன்றி கரிய நிறமுடைய வள்ளியை வலதுபுறமும், செந்நிறம் வாய்ந்த தெய்வயானையை இடதுபுறமும் வீற்றிருக்க வைத்து நிறவேறுபாடுகளிற்கு அப்பாற்பட்டவர் என்ற உயரிய தத்துவத்தினையும்

*மனிதர்களுக்கு எந்த பொருளின் மதிப்பும் அது இல்லாதபோதுதான் தெரியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்த்துகிறார். இவ் இறை தத்துவத்தினை உணராத நாம் சாதி, நிற வேறுபாடுகளை முன்னிறுத்தி முரண்பாடுகளை உருவாக்கி ஆலய வளர்ச்சி, மேம்பாடுகளில் பின்னோக்கி பயணிக்கிறோம்.

"இறைவன் ஏன் கல்லானான் கல்லாய் போன (கற்குவியலாக்கிய) மனிதர்களாலே"

கதிர்காமத்தில் ஓலையால் வேயப்பட்ட புராதன கருவறையில் இருந்து கந்தன் இறை தத்துவத்தினை உணர வைத்து சாதி, சமய, இன, மொழி, நிற வேறுபாடுகளிற்கு அப்பால் தன்னிடம் யாத்திரை வரும் பக்தர்கள் அனைவருக்கும் மாணிக்ககங்கை ஊடாக மலநோயை நீக்கி அருள்புரிகிறார் கதிர்காமக் கந்தன். கதிர்காமத்தானுடன் வரலாற்றுச் சரித்திர தொடர்புடைய செல்வச்சந்நிதியானும் பூவரசமர நிழலில் புராதன கருவறையில் இருந்து தன் சந்நிதியே தஞ்சமென வரும் பக்தர்களிற்கு தொண்டைமானாறு மூலம் மல நோயை நீக்கி புகலிடமளித்து ஆறுதலளித்து சந்நிதியான் ஆச்சிரமம் ஊடாக என்றும் அன்னமளித்து அருள்மழை பொழிகிறார். ஒருவருக்கு எவ்வளவுதான் வசதிகள், வாய்ப்புக்கள் இருப்பினும் இறுதியில் சந்நிதியானே ஆறுதலளிக்கிறான்.

மேலும் மாற்றுவலுவுடைய (கண்பார்வையற்ற) முருக பக்தர் ஒருவர் சந்நிதியின் சந்நிதியில் கற்பூர விற்பனை செய்து தொண்டு புரிந்து மாற்றுவலுவுடைய (கண்பார்வையற்ற) நபர் ஒருவர் கல்வி கற்று சட்டத்தரணியாக வருவதற்கு அப்பணத்தினை வழங்கியுள்ளார் என்பதனை பத்திரிகையொன்றின் கட்டுரை வாயிலாக அறிய முடிந்தது. இதனை அறியும்போது சந்நிதிக் கந்தனின் கருணைமழையினை உணர முடியும்.

திருச்செந்தூர் கந்தனாம் சுப்பிரமணியருடன் தொடர்புபட்ட பெருமைமிகு பொலிகண்டி கந்தவனக் கந்தனாம் சுப்பிரமணியர் "பழையவராக" காட்சிகொடுத்து கண்பார்வையிழந்த பெரும்புலவராம் உடுப்பிட்டி சிவசம்புவிற்கு கண்பார்வை வழங்கியமையும் அருளாட்சியே. சிவசம்புப்புலவர் கந்தவன நறுநீர்க்கேணியில் நீராடி நோய் நீங்கி கண்பார்வை பெற்றதுபோன்று நாமும் நறுநீர்க்கேணியில் நீராடி ஆணவமல நோய் நீங்கி, அறிவையும், ஆகம உணர்ச்சியையும் பெறவேண்டும். நான், எமது எனும் மலநோய் நீங்கவும் வேண்டும். இவ்வாறு மலநோயை நீக்குவதன் காரணமாகவே சிவபெருமான் "வைத்தியநாதர்" எனும் திருநாமத்தினைக் கொண்டுள்ளார்.

ஆலயங்களில் உபயங்கள், உற்சவங்கள், பூசைகள் வழங்கி வழிபாடு செய்வதற்கு அனைவருக்கும் ஞானத்தை - அறிவை வழங்கியமையானது ஆன்ம ஈடேற்றத்தினதும் அத்துவித முத்தியிற் சேர்வதன் பொருட்டேயாகும். இந்தவகையில் தில்லைக் கூத்தனாம் நடராஜனின் திருவாதிரை நட்சத்திரத்தைக் கொண்டவரும், மன்னார் திருக்கேதீச்சரத்தில் சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களின் முயற்சியினால் நிறுவப்பட்ட "சிவானந்த குருகுலத்தில்" குருகுலப் பயிற்சி பெற்று (1972) சிவாச்சாரியாராக சிவன் மைந்தனாம் கந்தவனக் கந்தனுக்கு பிரதம குருவாக (1972 - 2022) 50 ஆண்டுகளாக பக்தி உள்ள பண்பினர்க்கு மலநோய் நீங்கி பல்வளமும் கிடைக்கும் பொருட்டு "வைத்தியநாதனாக" வைத்தியநாதக்குருக்கள் "வீபூதி போட்டு" பிணிபோக்குவது கந்தவனத்தின் வரலாற்றுப் பதிவு என்பதுடன் இறைஉணர்வு அனுபவமே.

*தேடிப் பெறவேண்டியது புகழ். நாடி வரவேண்டியது மரியாதை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமான் தென்முகக் கடவுளாக, தென்னவராக தெட்சணாமூர்த்தி வடிவில் கல்லால மரநிழலின் கீழ் அமர்ந்து இருந்து நான்கு முனிவர்களிற்கும், பக்தர்களிற்கும் அருள்மழை பொழிகிறார். பக்தர்கள் வியாழக்கிழமைகளில், தெட்சணாமூர்த்திக்கும், வியாழ பகவானிற்கும் மஞ்சள் நிற மலரினால் அர்ச்சித்தும், மஞ்சள் பட்டுச்சாத்தியும், கடலை மாலை அணிவித்தும் வழிபாட்டினை மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது. குறித்த நான்கு முனிவர்களிற்கு கல்லால மரத்தின்கீழ் அமர்ந்து தெட்சணாமூர்த்தி அருளாட்சி செய்யும் சிற்பமானது வைரப்பொழிகல்லினால் அமையப்பெற்ற கந்தவனக் கருவறையின் தள விமானத்தின் தென்திசை நோக்கியதாகவும் அருகே திருஞானசம்பந்தர் பிறந்த மேனியுடன் தாளத்துடன் உள்ளமையும் தத்ரூபமாக தென் இந்திய சிற்பாசாரி இராமசாமி அவர்களால் 1980 காலப்பகுதியில் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சிவன் மைந்தனாம் கந்தவனக் கந்தனும் காஞ்சிமா அருகிலுள்ள தலவிருட்சமாம் வன்னிமர நிழலின்கீழ் தென்திசை நோக்கி தென்னவராக பழையவராக பன்னிரண்டு கன்னியருடன் சண்முகப்பெருமானாக காஞ்சிமா மாங்கனி வழங்கி குழந்தைவரமளித்து அருள்மழையும் கருணை மழையும் பொழிகிறார். அதேவேளை பழையவருக்கு அருகில் ஆதிமூலவராம் "வஜ்ரவேல்" சந்நிதானம் அமைந்திருப்பதானதும் "காஞ்சிமா" அமைந்திருப்பதானதும் கந்தபுராணத்தில் குறிப்பிடப் பெறும் "காஞ்சிமாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி" எனும் கந்தபுராணக் காப்பு வசனத்திற்கு அமைய கந்தபுராணத்துடன் கந்தவனக்கந்தன் தொடர்புபட்டு இருப்பது "கந்தபுராணமும் ஈழத்துக் கந்தன் திருத்தலங்களும்" எனும் கட்டுரைத் தலைப்பிற்கும் கந்தபுராணத்திற்கும் வலுவான சான்றாக அமைந்துள்ளது. 1900 - 1908 காலப்பகுதியில் கந்தவன இப்பழையவர் மூலவராக இருந்தபோது அபிஷேக குடம் விழுந்து இடதுபுற வரதகரம் ஊறடைந்துள்ளது. ஊறடைந்ததன் காரணமாக சமுத்திரத்திலே இட எண்ணியிருந்த நிலையில் பக்த அடியார் ஒருவரின் கனவில் தோன்றி குறித்த வன்னிமர நிழலின் கீழ் பிரதிஷ்டை செய்யுமாறு கூறியதற்கிணங்கவே மூலவர் பழையவராக வஜ்ரவேல் ஆலயத்திற்கு அருகில் வன்னிமரத்திற்கு அருகில் பிரதிஷ்டை செய்யப்பட்டார். இதன்போது இவரை முல்லைத்தீவு குமரபுரத்திலிருந்து கடல்மார்க்கமாக கொண்டுவந்தவர்களாலேயே இதன்போது பழையவர் ஆலயம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. கந்தனுக்கு முன்னே அனைவரும் சமமானவர்கள் என்பதற்கு அமையவும், இவர்களுடன் அவர்கள் உறுதுணையாக செயற்பட்டதன் அடிப்படையிலும், உபயங்கள் பழையவர் உட்பட அனைத்துத் திருப்பணிகளிற்கும் அனைவருக்கும் இடமளித்தமையும் வரலாற்று உண்மையே. இப்பழையவரே உடுப்பிட்டி சிவசம்புப் புலவரிற்கு கண்பார்வை அளித்தமை புலவரின் (1829 - 1910) பிரபந்தத்திரட்டின் மூலம் அறியக்கூடியதாகவுமுள்ளது. (தொடரும்...

---

நாம் நம் நன்றியை இறைவனுக்கு எப்படிச் சமர்ப்பிப்பது? நம்மைச் சுற்றியிருக்கும் மக்களிடம் அன்பு செலுத்தி, உதவ வேண்டியவர்களுக்கு உதவிசெய்து, சமுதாயத்திற்குச் சேவை செய்வதன் மூலம் நம்மைப் பாதுகாத்து வரும் இறைவனுக்கு நாம் நமது நன்றியைச் செலுத்த முடியும்.

*துணிந்தவர் தோற்றதில்லை. தயங்கியவர் வென்றதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமூலர் தவமொழி

(தொடர்ச்சி...

– திரு ஆ.தா.இ. ஜெயபாலன் அவர்கள் –

உலகுக்கு உறுதுணையாக நிற்பது இறைவனே. உலகில் இருக்கும் ஒவ்வொரு உயிருக்கும் உலகம் முழுவதற்கும் அவனே உயிராகும். இதைக்கூறி தமது அனுபவத்தை எடுத்துக்காட்டி, அந்த அனுபவத்தை நீங்களும் அடையுங்கள் என்று உபதேசிக்கிறார் திருமூலர்.

ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டீர் உல குக்குயி ராவது

பல சமயங்கள் பல விதமாக கூறியபோதிலும் அவை அனைத்தும் ஒரு தெய்வம் என்பதை அழுத்தமாகப் பாடுகிறார்.

நன்றுகண் டீர்இனி நமச்சிவா யப்பழந்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே.

(நமச்சிவாய பழம் - "நமச்சிவாய" என்ற மூலமந்திரத்திற்குரிய மூர்த்தியாகிய சிவபெருமானை 'நமச்சிவாய பழம்' என்கிறார். நல்ல நமச்சிவாயபழம் - தீங்கனியாகிய இந்த நமச்சிவாய மூர்த்தி நன்று - நமக்கு நன்மை தரக்கூடிய கனியாகும். கண்டீர் - என்பதை உணருங்கள் தின்று கண்டோர்க்கு - அப்பழத்தை தின்று சுவை கண்டுற்ற எனக்கு கண்டேற்கு - கண்ட எனக்கு இது தித்தித்த வாறே - நான் அனுபவித்த ஆனந்தத்தை நீங்களும் அடைந்து மகிழுங்கள். எனக்கு அது தித்தித்தவாறே உங்களுக்கும் நல்ல பழமாகும்.)

ஒன்றுகண் டீர்உல குக்கொரு தெய்வமும்
ஒன்றுகண் டீர்உல குக்குயி ராவது
நன்றுகண் டீர்இனி நமச்சிவா யப்பழந்
தின்றுகண் டேற்கிது தித்தித்த வாறே.

இனி சிவபெருமானுடைய கோலங்களை வர்ணித்து உருக்கத்தோடு பாடுகிறார்.

சந்திரன் பாம்பொடுஞ் சூடுஞ் சடாதரன்

சந்திரனையும் பாம்பையும் சூடிய சடையை தரித்த எம்பெருமான்

வந்தென்னை யாண்ட மணிவிளக் கானவன்

(வந்து என்னை ஆண்ட - அவனே வலிய வந்து என்னை ஆட்கொண்ட மணிவிளக்கானவன் - ஜோதிமயமான இறைவன்)

அந்தமும் ஆதியும் இல்லா அரும்பொருள்

(அந்தம் - முடிவு ஆதி - பிறப்பு இல்லா அரும் பொருள் - முடிவும் தோற்றமும் இல்லா இறைவன்)

சிந்தையின் மேவித் தியக்கறுத் தானே.

(சிந்தையில் மேவி - என் சித்தத்திலே வந்திருந்து தியக்கு - மும்மல மயக்கம் அறுத்தானே - களைந்தான்.)

*வெற்றி என்பது நிரந்தரமல்ல. தோல்வி என்பது இறுதியானதுமல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மல இருளிலே அலைகின்ற என்னை அந்த பரம்சோதி வலிய வந்து ஆண்டுகொண்டு, சிந்தையிலே வீற்றிருந்து அந்த சிந்தையை பற்றிக்கொண்டிருக்கும் மும்மலங்களை அறுத்துக் களைந்து அருளினான் என்கிறார்.

சந்திரன் பாம்பொடுஞ் சூடுஞ் சடாதரன்
வந்தென்னை யாண்ட மணிவிளக் கானவன்
அந்தமும் ஆதியும் இல்லா அரும்பொருள்
சிந்தையின் மேவித் தியக்கறுத் தானே.

எங்கும் நிறைந்து எல்லாம் ஆகி நின்ற பரம்பொருளை தன் உள்ளத்திற்குள் நின்றது என்ற அனுபவத்தை எடுத்து சொல்கிறார். உலகெலாம் பரந்து நின்ற இறைவன் என் உள்ளத்திற்குள்ளே அகப்பட்டுக் கொண்டான் என்று ஆனந்தம் பொங்கப் பாடுகிறார்.

சிவன் வந்து தேவர் குழாமுடன் கூடப்
பவம்வந் திடநின்ற பாச மறுத்திட்டு

(குழாம் - பரிவாரம் தேவர் பரிவாரங்கள் சூழ்ந்து வந்து பவம் - பிறப்பு பவம் வந்திட நின்ற பாசம் - பிறப்பு உண்டாகி வருவதற்கு காரணமாக நிற்கின்ற பாச வினையை அறுத்திட்டு - களைத்தெறிந்து)

அவனெந்தை யாண்டரு ளாதிப் பெருமான்

(அவன் எந்தை - என் அப்பனாகிய இறைவன் ஆண்டு அருள் ஆதிப் பெருமான்-கருணையோடு அருள் செய்து ஆட்கொள்கின்ற ஆதி முதல்வனாகிய இறைவன்)

அவன் வந்தெ னுள்ளே யகப்பட்ட வாறே

(அவன் - அப்படிப்பட்ட பெருமையும் வியாபகமும் கொண்ட சர்வேஸ்வரன், வந்து என் உள்ளே - கீழே இறங்கி வந்து அடியேனுடைய உள்ளமாகிய சிற்றில்லத்தில் அகப்பட்டவாறே - சிக்கிக்கொண்டான் அல்லவா)

சிவன் வந்து தேவர் குழாமுடன் கூடப்
பவம் வந்திட நின்ற பாச மறுத்திட்டு
அவனெந்தை யாண்டரு ளாதிப் பெருமான்
அவன்வந்தெ னுள்ளே யகப்பட்ட வாறே.

அகப்பட்டவாறே என்பதிலுள்ள "ஆறே" என்ற சொல். என்ன அதிசயம் என்ற களிப்பை காட்டுகிறது. பாட்டில் "அவன்" என்ற சொல் இரண்டு முறை வந்திருக்கிறது. அவன் அப்படிப்பட்டவன் என்ற களிப்பினால் இப்படி இருமுறை "அவன், அவன்" என்று பாடுகிறார்.

இறைவனோடு கூடி அனுபவித்த இன்பத்திலே, அந்த பக்திப் பரவசத்திலே, முனிவர் உறவு மேலிட்டு நாயகி நிலையில் பாடுகிறார்.

அன்பு உள்உருகி அழுவன், அரற்றுவன்

இறைவனுக்காக இதயம் அன்பினால் உருகுவதும், கண்தன் கண்ணீர் சொரிவதும் அரற்றி புலம்புவதும், ஒரு காதல் அனுபவம்! அதை இப்படிக் கூறுகிறார்.

அன்புஉள் உருகி அழுவன், அரற்றுவன்
என்பும் உருக இராப்பகல் ஏத்துவன்,
(என்பு - எலும்பு ஏத்துவன் - துதித்துப் பாடுவன்)

*உன்னை வழிநடத்த அறிவைப் பயன்படுத்து.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் பொன் மணியை, இறைவனை, ஈசனைத்
தின்பன், கடிப்பன், திருந்துவன் நானே.

(என் பொன் மணியை - என்னுடைய உடைமையான ஈசனாம் பொன்மணியை திருத்துதல் - மேவி அணைத்தல்)

சிவமாகிய பேரின்ப காதலனை எண்ணி பக்தி பரவசத்தில் பாடுகிறார் திருமூலர். மாணிக்கவாசகரும் தன் திருவாசகத்தில்

"நெக்கு நெக்குள் உருகி உருகி
நின்றும் இருந்தும் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதும் தொழுதும் வாழ்த்தி
நானாவித்தவால் கூத்து நவிற்றிக்
செக்கா போலும் திருமேனி
திகழ நோக்கி சிலிர் சிலிர்த்துப்
புக்கு நிற்பது என்று சொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே"

என்று பேரின்ப நாட்டத்தோடு பாடுவதும் இதே பக்தி அனுபவம்தான்! இப்படியே ஆழ்வார்களும் பாடியுள்ளனர்.

யோகியும், ஞானியும் சித்தருமாகிய திருமூலர் பக்தி நிலையிலே நின்று சிவக் காதலனோடு பாடிய திருமந்திரம் இது.

அன்பு உள்உருகி அழுவன், அரற்றுவன்
என்பும் உருக இராப்பகல் ஏத்துவன்
என் பொன் மணியை, இறைவனை, ஈசனைத்
தின்பன் கடிப்பன், திருத்துவன் நானே.

(தொடரும்...

### கதிர் காமர் கொண்டமர்த்தி வணங்கிய கைவேல்

எல்லா உறவுகளும் பொய்யென்று உணர்ந்து கொண்டேனே முருகா
உனதடி தொழுதெழுவது நன்றென்று தெரிந்துகொண்டேனே முருகா
வல்ல மனத்தால் யான் வருந்து கின்றேன் முருகா - நல்
வரம்பெற உனதடி தேடி நாடுகின்றேன் முருகா
எல்லோர்க்கும் நல்வரம் ஈர்ந்து அளிக்க வல்ல வேல்
செல்வச் சந்நிதியில் அமர்ந்திருக்கும் இனிய வடிவேல்
கல்லாமை இல்லாதவரையும் காத்து ஆளுகின்ற வேல்
கதிர் காமர் கொண்டமர்த்தி வணங்கிய கைவேல் முருகா.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*உன் வாழ்க்கையை நீ உண்மையாக நேசி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

மிகத் தொன்மை வாய்ந்த எமது சமயத்தை, சமய நம்பிக்கைகளை, சமயக் கலாசாரத்தை, மேன்மையுற பின்பற்றல் எமது தலையாய கடமையாகும். உபதேசங்கள் சொன்னால் அவற்றைக் கேட்டால் மட்டும் போதாது. அதன்படி நடந்தாகவும் வேண்டும்.

சமயமே மனிதனை மனிதனாக வாழ வழி காட்டுகின்றது. சமயம் இல்லாது சமூகமே இல்லை. ஆரம்பத்தில் மனிதன் பயத்தினால் சமய நம்பிக்கை, சமய வாழ்க்கை ஆகியவற்றை மேற்கொண்டான். சூரியன், சந்திரன், மழை, இடி, மின்னல், காற்று ஆகியவற்றை இயக்கும் ஒரு சக்தி எல்லாவற்றிற்கும் மேலே உண்டு என்று நம்பினான். இந்த நம்பிக்கை பல பரிணாமங்களில் வளர்ந்து இன்று பிரமாண்டமான ஆலயங்களாக அருட் தலங்களாக ஆதீனங் களாக அமைந்து இறை பணி தொடர்கிறது. இறைவன் சந்நிதியில் ஏற்றத் தாழ்வு இல்லை. நாம் எல்லோரும் ஒன்று என்ற அந்த ஒரு சொல்லே ஒற்றுமையின் உயர்வை எமக்குக் காட்டி நிற்கவில்லையா? அது ஒன்றே போதும் எம்மை வாழ வைக்க, அதற்கு எம் உள்ளம் ஆத்மீகத்தையும் நாட வேண்டும்.

அறிவு வளர்ச்சிக்கு விஞ்ஞானம் உதவுவதுபோல் மனவளர்ச்சிக்கும் ஆத்மீக வளர்ச்சிக் கும் சமயம் உதவுகின்றது. இறைவன் ஒருவன். அவனே எல்லோருக்கும் தந்தை என்று நாம் கொள்வதன்மூலம் அன்பு சகோதரத்துவம் போன்ற ஜீவ ஊற்றுக்கள் எமது உள்ளத்தில் வேகமடைந்து எமது வாழ்வு நலம்பெற சமயம் உதவுகின்றது. மெய்ஞ்ஞானம் சமயம் என்றால் விஞ்ஞானம் அறிவு ஆகும். விஞ்ஞானம் கலவாத சமயம் நொண்டி என்றும் சமயம் கலவாத விஞ்ஞானம் குருடு என்றும் சொல்லி உள்ளார் ஐன்ஸ்டீன் என்னும் அறிவாளி.

நாம் காலையும் மாலையும் செய்யும் தோத்திரங்கள் பரமண்டலத்தில் இருக்கும் இறைவனுக்கு எவ்வாறு கேட்கும் என்னும் சந்தேகத்தை, கம்பியில்லாத் தந்தியைக் கண்டு பிடித்ததின் மூலம் தீர்த்து வைத்துவிட்டது விஞ்ஞானம். அன்று ஆதிமூலமே என்று ஓலமிட்ட யானையை ஓடி வந்து காப்பாற்றியவர் கண்ணபிரான். நம்பிக்கையோடு அந்த யானையிட்ட ஓலம் ஆண்டவன் செவியில் கேட்கத்தான் செய்தது. இறைவன் சர்வ வியாபகர். எங்கிருந்து நாம் அழைத்தாலும் நம்பிக்கையோடு நாம் அழைத்தால் அவர் வரத்தான் செய்வார். இறை வனுக்கு தூரம் முக்கியமல்ல. இறையில் நாம் வைத்த நம்பிக்கையின் அருகாமைதான் முக்கியம்.

அவர் தான் சர்வ வியாபகராயிற்றே. இறைவன் எம்மிடம் வருவார் என்றால் அவர் புலித்தோல் அணிந்து, சூலம் ஏந்தி, பிறை அணிந்து, அரவணிந்து, நதி சூடி சடாமுடியோடு வருவார் என்பதல்ல அர்த்தம். அவ்வாறு அவர் எமக்குக் காட்சிகொடுக்க நாம் ஒன்றும் நாயன்மார்களுமல்ல அதற்கு எமது பக்குவமும் போதாது. எனவே எம்மிடம் எப்படி இறைவன் வருவார் என்று சிந்தித்தால் ஏன் ஒரு நண்பனின் வடிவத்தில் அல்லது உறவினரின் வடிவத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்து இறைவன் எமக்கு உதவலாம் அல்லவா? உருவங்கள் மாறலாம் ஆனால், எமது இறை நம்பிக்கைக்கு பலன் நிச்சயம் கிடைத்தே தீரும்.

தெய்வ நம்பிக்கையை போதிப்பது சமயம். இதுவே சமயத்தின் ஆரம்பம் சமயம் என்ற சொல்லுக்கு, இறையை வழிபட்டு இன்னருள் பெற இதுவே நல்ல சமயம் (தருணம்) என்று பொருள்படக் கொள்ளலாம் அல்லவா?

மேலும் ஆன்மீக வளர்ச்சிக்கு சமய வேறுபாடு, மொழி வேறுபாடு, என்ற நோக்கின்றி நாம் இறையை வணங்க வேண்டும்.

யார் என்னை எப்படி வழிபடுகிறார்களோ அப்படியே நான் அவர்களுக்கு அருள் புரிகின்றேன் என்பது கீதையில் கண்ணன் வாக்கு. இது நாம் அறியாதது அல்ல.

உலகனைத்திற்கும் தெய்வம் ஒன்றே என்று பறைசாற்றுகின்றது திருமந்திரம்.

நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஏனைய மகான்களும் போதித்த உண்மையும் இதுதானே!

"ஆரியத் தமிழோடு இசையானவன்" என்று இறைவனைப் பாடுவதன் மூலம் அப்பர் சுவாமிகள் சமயத்தில் மொழி வேறுபாடுகளை நீக்குகின்றார்.

இதே போன்று திருமூல தேவரும் "பண்டிதர் தங்கள் பதினெட்டு பாஷையும் அண்ட முதலான் அரன் கொள்ளவாறே" எனப் பாடியுள்ளார்.

இந்த வகையில் வேற்றுமையிலும் ஒற்றுமை கண்டு களித்து வழிபடும் பெருமை எமது சமயத்திற்கு உண்டு என்பதில் நாம் களிப்படைய வேண்டும்.

அதற்கு எமது மட்டத்தில், நாம் என்ன செய்யலாம் என்பதையும் அதனை யாம் செய்கின்றோமோ என்பதையும் சிறிது சிந்தித்துப் பார்க்கவும் வேண்டும், செய்வோமா?

தொலைக்காட்சிப்பெட்டியின் திரை வடிவம் நாளுக்குநாள் மாறிக்கொண்டே போகிறது. திரையரங்கில் அமர்ந்து படம் பார்க்கும் அதே உணர்வு இப்போ நம் வீட்டுக்குள்ளேயே வந்துவிட்டது. ஆனால் அதற்கு மாறாக நமது மனத்திரையின் வடிவமோ (மனப்பான்மை) நாளுக்குநாள் சுருங்கிக்கொண்டே வருகிறது. நமது மனத்திரையை விசாலமாக வளரவிடாமல் தடுப்பவை நமது சுயநலம் மற்றும் ஆணவம் ஆகிய இரண்டுமே தான். மிகவும் நுட்பமான கண்ணுக்கே தெரியாத தூசிகளையும்கூட உறிஞ்சிப் பொருட்களை யும் இடத்தையும் சுத்தப்படுத்தும் வெற்றிடச் சுத்தமாக்கி நம் வீடுகளில் பாவனைக்கு வந்து விட்டது. விஞ்ஞானத்தின் வளர்ச்சியினால் நமது சுற்றுப்புறத்தையும் வீடுகளையும் மிகவும் சுத்தமாக வைத்துக்கொள்ள முடிகிறது. ஆனால் நமது மனதுக்குள்ளே அவ்வப்போது சேரும் குப்பைகளை அதாவது தீய எண்ணங்களைக் களையவேண்டுமென்று என்றாவது நாம் நினைத்ததுண்டா? நமது மனத்தைச் சுத்தமாக வைத்துக்கொண்டாலே மேற்குறிப்பிட்ட சுயநலமும், ஆணவமும் தானாகவே காணாமற் போய்விடும்.

தண்ணீரால் தினமும் உடலைக் கழுவுவதுபோல உண்மையினாலும் தெய்வ சிந்தனையினாலும் உள்ளத்தைச் சுத்தப்படுத்த வேண்டும்.

*எதையும் ஏற்றுக்கொள்ளும்போது மனம் இலகுவாகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி....

# ஆனந்த சாகரம்

– *திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன்* அவர்கள் –

## ஸ்ரீ தேவி பாகவதம்

ஸ்ரீ தேவியானவள் லோக மாதாவானதினால் தேவிக்கு மேலான தெய்வமே கிடையாது. பரதேவதையானவள் ஜகத்தை சிருஷ்டிக்கும்போது மும்மூர்த்திகளான பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் என்ற தேவதைகளை சிருஷ்டிக்கிறாள். அவர்கள் மூலமாக சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரங்களை நடத்துகிறாள். அவர்கள் ஸ்ரீ தேவியின் ஆக்ஞைக்கு உட்பட்டு தத்தம் தொழிலை நடத்துகிறார்கள்.

ஸ்ரீதேவி பாகவதம் என்ற மகாபுராணத்தை பகவானான வேத வியாசர் அருளினார். லாபாசாத் மகாவிஷ்ணுவே பராசரர் மூலமாக ஸத்தியவதி என்ற ஸ்திரீயிடம் வேத வியாசராக அவதாரம் செய்தார். அந்த மஹானுபாவன் ஒன்றாக இருந்த வேதத்தை நான்கு பாகங்களாகப் பிரித்து நான்கு சிஷ்யர்கள் மூலமாக உலகத்தில் பிரசாரம் செய்வித்தார். நேரே வேதத்தை அனுஷ்டிக்க அதிகாரமில்லாத வ்ராத்ய புருஷர்களும், விஜய பந்துக்களும், ஸ்திரிகளும் எவ்விதம் தர்மத்தின் உண்மையறிவை அடையக்கூடும் என்று கவலையடைந்து, அவர்களும் தர்ம அனுஷ்டான தத்பரர்களாக வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் மகாபாரதம் என்ற இதிகாசத்தையும், பதினெட்டு மகாபுராணங்களையும், இயற்றினார். அவருடைய மாணக்கர்களைக் கொண்டு மகா புராணங்களையும், மகாபாரதத்தையும் ஆங்காங்கு பரவும்படி செய்தார். ஆயினும் ஸ்ரீ தேவி பாகவதத்தை மட்டும் மற்றவர்கள்மூலம் பிரசாரம் செய்யாமல் தாமே பிரசாரம் செய்தார். பரீஷித்து மகாராஜாவின் மகனை ஜனமேய மகாராசாவிடம் வியாச பகவான் தேவி பாகவதத்தை முதற்தடவையாக பிரவசனம் செய்தார். பரிஷித்து மகாராசாவுக்கு பாம்பு தீண்டி மரணம் ஏற்படும் என்ற பிராமண சாபத்தினால் அச்சமடைந்த ஜனமேயன் அதற்கு சாந்திகாண விரும்பி வேதவியாசரை வேண்டி அந்த மகானுடைய முகார விந்தத் திலிருந்து தேவி பாகவத கதாம்ருதபானம் செய்து அந்தப் புண்ணிய மகிமையால் தன் பிதாவை துர் மரணத்திலிருந்து விடுவித்து ஸ்ரீ தேவியினுடைய சாயுஜ்ய பதவியை அடைந்தார். வியாச பகவான் ஒன்பது தினங்கள் தேவி பாகவதத்தை ஜனமேய ராஜாவுக்கு சிரவணம் செய்து வைத்தார்.

அந்த ஒன்பது தினங்களிலும் லோக மாதாவான பராசக்தியை நவாவர விதியை அனுசரித்து பூஜைசெய்து வரவேண்டுமென்ற நியமத்தையும் வியாசர் அனுஷ்டிக்கச் செய்தார். ஒன்பதாவது நாள் ஸ்ரீ தேவி பாகவத ஸமாப்தி நடந்த சந்தர்ப்பத்தில் பரீஷித்து மகாராஜா சாயுஜ்ய பதவியடைந்து, தனது புத்திரனுக்கு தரிசனம் கொடுத்து வாழ்த்திவிட்டு ரிஷிகளும் போற்றும் மகிமையோடு ஸுதா சிந்துவின் நடுவில் விளங்கும் ஸ்ரீபுரம் சென்றார். ஜனபேயனும் ஆனந்தமடைந்து வியாசபகவானைப் பூஜித்து உபசாரம் செய்தான். பதினெண் புராணங்களுள் இந்தத் தேவி பாகவத புராணம் மிகவும் மேன்மையானது. கேட்கும் ஜனங்களுக்கு தர்மம்,

*எட்டி வைத்து முயன்றால் எல்லாமே எட்டிவிடும் தூரம்தான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தம், காமம், மோட்சம் என்ற நான்கு புருஷார்த்தங்களையும் சிரவண மாத்திரத்தால் கால தாமதமில்லாமல் அளிக்கவல்லது.

இக் கலியுகத்தில் ஸ்ரீதேவி பாகவதத்தை தினந்தோறும் பக்தியுடன் சிரவணம் செய்துவர புத்திரலாபம், பரமதரித்திரம் நீங்கி தனவானாகலாம். மகாரோகியும் ரோகத்திலிருந்து விடுபடலாம். எந்த வீட்டில் தினந்தோறும் தேவி பாகவதப் புத்தகம் பூஜிக்கப்படுகிறதோ, அந்த வீடு பரம பரிசுத்தமான ஸ்தலமாகிறது. அந்த வீட்டில் வாசம் செய்கிற சகல பிராணிகளுடைய சகல பாவங்களையும் அது ஒழிப்பிக்கிறது. ஸ்ரீ தேவி பாகவதக் கதைகளை அஷ்டமியிலோ, சதுர்த்தசியிலோ, நவமியிலோ கேட்கும் மனிதன் மேலான ஸித்திகளைப் பெறுகிறான். உலகில் நிகரற்ற புகழையடைகிறான்.

சூத மகாமுனிவர் சனகாதி மகரிஷிகளுக்கு ஸ்ரீதேவி பாகவதத்தை சொல்கிறார். நாரதர் வசுதேவருக்கு தேவியின் ஸ்வரூபத்தை உபதேசிக்கின்றார். மூன்று காலங்களிலும் (ஜகத்தின் உற்பத்திக்கு முன்னும், பிரளய காலத்துக்குப் பின்னும், வர்த்தமான காலத்திலும்) விளங்கக்கூடிய பிரம்மம் என்பதே அந்தத் தேவிதான். அவள் ஸச்சிதானந்த ரூபிணி. இந்த லோகத்தை ஆட்டிவைக்கிற மாயையைத் தன்வசத்தில் வைத்திருக்கும் பரதேவதை. சகல உலகங்களிலும் வியாபித்திருப்பவள். அந்த தேவியை ஆராதித்துத்தான் பிரம்மா உலகத்தைப் படைத்தார். மகாவிஷ்ணுவும் தேவியினுடைய கிருபையால்தான் உலகை ரட்சிக்கிறார். உருத்திரனும் தேவியின் கருணாகடாட்சத்தால் ஸம்கார காலத்தில் ஸர்வ ஜகத்தையும் ஸம்கரிக்கின்றார். ஆராதிப்பவர்க்கெல்லாம் உடன் முத்தியைக் கொடுப்பவள். ஈஸ்வரனுக்கெல்லாம் ஈஸ்வரியாக விளங்கிவருகிறாள். தேவி பாகவத சிரவணம் செய்கிறவனுக்கு புத்தியோ முத்தியோ கிடைப்பது அரிதல்ல. பக்தர்களுடைய சகல துக்கங்களையும் விலக்குவதால் பரதேவதையான ராஜராஜேஸ்வரிக்கு “துர்க்கை” என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. அவள் தனது பக்தனுடைய குடும்பத்தில் மேலான நலன்களெல்லாம் சேரும்படி செய்து வருகிறவள். அந்த துர்க்கா தேவியை ஆராதனம் செய்தால் இகத்திலும் பரத்திலும் விரும்புகிற சகல விருப்பங்களையும் அடையலாம்.

முருகப்பெருமான் அகத்தியர்க்குச் சொல்கிறார் ஸ்ரீ தேவி பாகவதத்தினுடைய மகிமைகளை முழுவதும் யாராலும் வர்ணிக்கமுடியாது. ஸ்ரீ தேவி பாகவதத்திலுள்ள தர்மங்கள் எல்லைக்குட்படாத அளவினை உடையவை. காயத்திரியினுடைய மகிமையைப் பற்றி விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. காயத்திரி தேவிக்கு பகவதி என்ற பெயர் சாஸ்திரங்களில் பிரசித்தமானது. பகவதி என்ற பெயரோடு கூடின காயத்திரி தேவியினுடைய மகிமையானது இப்புராணத்தில் காணப்படுகிற காரணத்தால்தான் இதற்கு பாகவதம் என்ற பெயர் ஏற்பட்டது. மும்மூர்த்திகளாலும் ஆராதிக்கப்படுகிற பராசக்தியே ஸ்ரீ தேவி பாகவதத்தின் முக்கிய தேவதையாகும். ஸ்ரீ தேவி பாகவதத்தை நியமப்படி சிரவணம் செய்த மாத்திரத்தில் சகல விருப்பங்களையும் கொடுக்கக்கூடியது. தர்மஸித்தி, லக்ஷ்மி கடாட்சம், மேலான சுகங்களைக் கொடுக்கும். சகல ரோகங்களையும் நாசம் செய்யும். ராஜதரிசனத்திற்குரிய அனுகூலத்தை உண்டாக்கும். அந்த வீட்டில் வாசம் செய்யும் சகல பிராணிகளுடைய சகல பாவங்களையும் ஒழிப்பிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஷ்டமியிலோ, நவமியிலோ, சதுர்த்தசியிலோ பாகவதக் கதைகளை பக்தியுடன் கேட்கிற மனிதன் மேலான சித்திகளைப் பெற்று, நிகரற்ற புகழை அடைகிறான். சகல சௌபாக்கியங்களையும் கொடுத்து மோட்ச சாதனமான ஜீவப்பிரம்ம ஐக்கிய ஸாக்ஷாத்காரத்தையும் கொடுக்கக்கூடிய வல்லமையுடையது. நான்கு நவராத்திரி காலங்களிலாவது தேவி பாகவதக் கதையை சிரவணம் செய்ய வேண்டியது அவசியமாகும்.

தேவியை நியமப்படி பூஜித்து ஹேகாத்யாயினி! ஹேமகமாயே! ஹேபவானி! ஹேபுவனேஸ்வரி! பிரம்மா, விஷ்ணு, சிவன் என்பவர்களாலும் ஆராதிக்க தகுந்த ஹேபரதேவதே! ஹேதாயே! ஸம்ஸார ஸாகரத்தில் மூழ்கித் தவிக்கும் என்னைக் கரையேற்றி வைத்து என்னுடைய மனோரதத்தைப் பூர்த்தி செய்யவேண்டும். உன்னுடைய பாதார விந்தங்களை நமஸ்கரிக்கின்றேன் என்று பிரார்த்தித்துக்கொண்டு ஏகாக்கிரமான மனதுடன் பக்தியோடு கதாசிரவணம் செய்ய வேண்டும். பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து ஓடிவந்து அன்னை அருள்புரிவாள். அன்பெனும் பிடியில் அகப்படும் மலை, பொங்கிய அன்பினோடு, மங்கலம் பொலிய வாழவைத்து ஸ்ரீ அம்மாள் முத்திப் பேற்றினையும் அருளிடுவாள்.

அன்பைச் சொரிவோர் கோரும் வரங்கள் நொடியில் அளிப்பவள் நீயே
நான் உனது பிள்ளை நாளும் பொழுதும் செய்கின்ற
குற்றமெல்லாம் பொறுத்து குறையில்லாமல் காத்தருளி
பெற்றவள் நீயன்றோ பேருவகை தந்து அனைத்திடம்மா.

கருணைத் தாயிருக்க சேய் நான் வருந்தலாமா
தாய் மடியைத் தேடி தாவிவரும் கன்றினைப்போல்
வாய் நிறையப் பாடி உன் வாசலுக்கே ஓடிவந்தேன்
சேய் முகத்தைப் பாராயோ திருவருள் தாராயோ.

மண் சுமந்தோன் மாணிக்கமே மரகதவல்லி
கண்குளிர உன் பேரெழிலைக் காணவேண்டும்
சிம்ம வாகினியே ஸ்ரீதரன் தங்கையே
தாமதமின்றித் தந்தருள்வாய் தரிசனமே.

ஸ்ரீ கிருஷ்ணர் வெல்லப்பட முடியாதவர். "கோவிந்தா" எனப் போற்றித் துதிக்கும்படி பல சாதனைகளைச் சாதித்தவர். அப்படிப்பட்டவரே தனக்கும் மிஞ்சி ஒரு சக்தி இருப்பதை உணர்த்தினார். ஸ்ரீ கிருஷ்ணர் ஸ்ரீ ஸ்ரீ காளி மாதாவை இக்கட்டான நேரத்தில் துதித்திருக்கிறார். ஸ்ரீ கிருஷ்ணரைப் பரமாத்மா எனும்போது அந்தப் பரமாத்மாவையும் விஞ்சியவர் அன்னை ஸ்ரீ கிருஷ்ணருக்கும் மேலானவள் அன்னை. அன்னை மூலசக்தி. அவளின் கிளை சக்திகளே சிவ, விஷ்ணு, பிரம்ம அம்சங்கள். வினைகள் யாரையும் விடுவதில்லை. கடவுளே மனித வடிவெடுத்தாலும் உலகைச் சார்ந்த வினைகளிலிருந்து தப்பவே முடியாது. பெருந் துன்பம், சாபம் இவற்றுக்கு ஆளாகும்போது அதிலிருந்து விடுவிப்பவள் அந்த ஆதிசக்தியான ஜெகன் மாதாதான் என வேத வியாசர் ஜனமேஜெயனுக்கு கூறினார். அன்னையே சரணம், சரணம்.

(தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கிலி திருமணம்

– திரு கு. *சிவபாலராஜா* அவர்கள் –

திருக்கயிலை வாழ்வு பரவை நாச்சியாருக்கும் ஆலால சுந்தரருக்கும் உரித்தாகியமை போல சங்கிலி நாச்சியாருக்கும் உரியதாயிற்று. திருக்கயிலையில் அவர் அநிந்திதையார் என்னும் பெயருடன் உமாதேவியாரின் தோழியாகப் பணிபுரிந்தவர். திருக்கயிலையில் அவருடன் பழகிய ஆலால சுந்தரர் என்னும் தொண்டரைச் சந்தித்தபோது அவர்மீது காதல் கொண்டு நின்றமையால், சிவபெருமான் "சங்கிலியாரைப் பூவுலகில் உதித்து, வேறு பெயர் பூண்டு ஆலால சுந்தரரைத் திருமணம் செய்து இன்பம் அனுபவித்து வாழக் கடவீராக" என திருவருள் பாலித்தார். இறைவனின் இத் திருவருள் காரணமாக அநிந்திதையார் பூவுலகில் தொண்டை நாட்டில் சிவலோகம் என விளங்கும் திருவொற்றியூரில் ஞாயிறு கிழார் என்பவருக்கு மகளாக அவதரித்தார். அவருக்கு வழங்கிய பூவுலகப் பெயர் சங்கிலி நாச்சியார் என்பதாகும். அவர் உமாதேவியாரின் திருவடிகள்மீது மிகுந்த பக்தியுடையவராகத் திகழ்ந்தார்.

சங்கிலியார் திருமணப் பருவமடைந்ததும் அவரின் பெற்றோர் அவருக்கு திருமண ஏற்பாடுகள் செய்தனர். அதை அறிந்த சங்கிலியார், "நான் வென்றி விடையர்க்கு அருள் செய்தார். ஒருவர்க்கு உரியேன்" என உறுதிபடக் கூறினார். எனவே, நான் வேறு ஒருவரையும் திருமணம் செய்ய மாட்டேன் என்னும் தனது சபதத்தை வெளிப்படுத்திக் கூறினார். இந்நிலையில் சங்கிலியாரைத் திருமணம் செய்வதாக விருப்பமுடன் காத்திருந்த ஒருவன் மரணத்தை தழுவினார். அதனால் அச்சமடைந்த சங்கிலியாரின் பெற்றோர் திருவொற்றியூரில் கன்னிமாடம் அமைத்து, சங்கிலியாரை அதில் இருத்தி, இறைவனுக்குப் பணிவிடை செய்யுமாறு பணித்தனர். அவ்வாறு கன்னிமாடத்தில் வாழ்ந்த சங்கிலியார் திருவொற்றியூர் இறைவனைத் தினமும் வணங்கிப் பணிந்து, நறுமலர் மாலை தொடுத்து இறைவனுக்குச் சாத்தி இறை தொண்டு செய்து வந்தார். ஒருநாள் சங்கிலியார் மாலை தொடுத்து அதை இறைவனுக்குக் கொடுத்துத் திரும்பியபோது, அத் தலத்தில் வழிபட்டு நின்ற நம்பியாரூரர் சங்கிலியாரைக் கண்டுவிட்டார். சங்கிலியார் கன்னிமாடத்தில் தொங்கிய திரைச்சீலையை விலக்கிக்கொண்டு அதன் உட்சென்று விட்டார். சங்கிலியார் என்னும் அப்பெண் ஆரூரரின் மனத்தைக் கவர்ந்து விட்டார். அதனால் ஆரூரர் அங்கு நின்றவர்களை நோக்கி அப் பெண் யாவரோ என வினவியறிந்து கொண்டார். இச் சம்பவங்கள் யாவும் விதியின் வழியிலே நடைபெற்றன. இதனால் ஆரூரர் சுவாமியை வணங்கி நின்று சங்கிலியாரைத் தமக்குத் தந்தருளும்படி வேண்டினார். இதனால் இறைவன் திருவாக்குப்படியே சுந்தரர்க்குச் சங்கிலியார் மனைவியாகக் கிடைக்கும் இறை காரியங்கள் நடைபெறத் தொடங்கின. அதன்படியே இறைவன் சங்கிலியாரிடம் சென்று, சுந்தரரை மணக்கும்படி வேண்டுதல் விடுத்தார். அதற்குச் சங்கிலியார், சுந்தரர்க்கு பரவையார் என்ற பெயருடைய இன்னொரு மனைவி இருப்பதைச் சுட்டிக்காட்டினார். அதற்கு இறைவன், சுந்தரர் உனக்குச் சபதம் செய்து தருவான். நீ அதுபற்றி கவலைகொள்ள வேண்டாம் என அறிவுரை கூறினார்.

*அவரைப்போல் இவரைப்போல் அல்லாமல் உன்னைப்போல் வாழ்ந்து காட்டு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப் பற்றி சுந்தரர்க்கும் தெரியப்படுத்தினார். திருக்கோயில் வீதியில் நின்றதொரு மகிழ மரத்தடியில் சுந்தரர் இறைவனையும் சங்கிலியாரையும் கண்டு முன்பு கூறியபடி சங்கிலியாருக்கு இறைவன் முன்னிலையில் தனது சத்தியத்தைச் செய்து கொடுத்தார். சத்தியம் என்பது "சூளுரை" என்றும் குறிக்கப்படும்.

"இருவரால் இப் பிறவியை எம் பெருமான்
அருளால் எய்து வித்தார்
மருவும் பரவை ஒருத்தி இவள் மற்றையவளாம்"
என ஐயுற்றார்.

-ஏயர் புராணம் - பாடல் 229.

பின்னர் சுந்தரர் திருவொற்றியூர் தலம் சென்று இறைவனை வேண்டினார்.

மங்கை ஒருபால் மகிழ்ந்ததும்
அன்றி மணி நீள் முடி யின்கண்
கங்கை தன்னைக் கரந்தருளும்
காதல் உடையீர் அடியேனுக்கு
இங்கு நுமக்குத் திருமாலை
தொடுத்து என் உள்ளத் தொடையவிழ்த்த
திங்கள் வதனச் சங்கிலியைத்
தந்து என் வருத்தம் தீரும்.

-மே.நூ.பா. 232.

சிவபெருமானைப் பார்த்து சுந்தரர் நேருக்கு நேர் ஒரு வார்த்தை கேட்டார். அது, "நீர் மட்டும் இருவரை மணந்துள்ளீர், நான் மட்டும் இருவரை மணக்கலாகாதா" என்பதாகும். இதனைக் கொண்டு சிவபெருமானுக்கும் சுந்தரர்க்குமிடையே எத்துணை தோழமை உறவு ஆழமாகப் பதிந்துள்ளது என்பதை நோக்கலாம். எவ்வளவு துணிச்சல்மிக்க செயல் இக் கேள்வி. சிவனுக்கு உமை, கங்கை என்னும் பெயரில் இரு மனைவியர் உள்ளமை தெளிவு.

அன்று இரவு ஆரூரரிடம் இறைவர் வந்து உதவும் மனப்பாங்கில், "சுந்தரா உன் கவலை ஒழிக; சங்கிலியாரை உனக்குத் தந்தோம்" என அருள்வாக்குக் கொடுத்தார். அதேபோல சங்கிலியாரின் கனவில் தோன்றி,

சாரும் தவத்துச் சங்கிலி கேள், சால என்பால் அன்புடையான்
மேரு வரையில் மேம்பட்ட தவத்தான், வெண்ணெய் நல்லூரில்
யாரும் அறிய யான் ஆழ உரியான், உன்னை எனை இறந்தான்
வார் கொள் முலையாய், நீ அவனை மணந்தால் அணைவாய்.

எனப் பணித்து அருள் புரிந்தார் இறைவர். இறைவர் திருவருள் பெற்றவரை மணப்பது நல்லது என சங்கிலி எண்ணினாள். தான் நினைத்தவாறு மனம்போல் மாங்கல்யம் பெற்றதாக இந்த அடியவனாகிய ஆரூரர் மணவாளனாகக் கிடைக்கவிருப்பதை எண்ணிய சங்கிலி மனம் மிக மகிழ்ந்தாள். ஆயினும், ஆரூரர் திருவாரூரில் பரவையாரை மணந்திருந்தமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவரிடம் நாணத்துடன் சுட்டிக் காட்டவும், ஆருரன் சங்கிலியாரை விட்டுப் பிரியாத வண்ணமாக சத்தியம் (சூளுரை) செய்து தருவான் என்று சங்கிலியாருக்கு அருளிச் செய்த இறைவர் அங்கிருந்து மறைந்தார்.

அதன் பின்னர் ஆரூரரிடம் சென்று, தான் சங்கிலியாரிடம் சென்று நீர் அவள்மீது கொண்டிருக்கும் விருப்பத்தைத் தெரிவித்தோம் என்பதைக் கூறிய இறைவர் சங்கிலிக்கு ஆருரர் சூளுரை செய்து கொடுக்கவேண்டும் என்ற செய்தியையும் ஆருரர்க்கு அருளிச் செய்தார். அவ்வாறு சூளுரை செய்தால் பல திருத்தலங்களுக்கும் சென்று வழிபாடு செய்ய முடியாமற் போய்விடும் என்பதால், சூளுரை செய்யும்போது இறைவரும் அம் மகிழ மரத்தடியில் தங்கவேண்டும் என்பதை இறைவரிடம் கேட்கவும் அதற்கு இறைவரும் சம்மதித்தார். இதன் காரணம், இறைவர் வாழும் கோயில் முன்பாக சத்தியம் செய்தால் அதன்படி நடக்கவேண்டும். இறைவர் கோயிலை விட்டு வெளியேறி மகிழ மரத்தடியில் தங்கியபோது சத்தியம் செய்தால் அது குற்றமாகாது என உணர்ந்தார் ஆரூரர். அதன்படி சங்கிலியாருக்கும் நேரில் சென்று தெரிவித்தார். இறைவர் துயிலும் போது இச் செய்திகளைக் கனவில் கண்ட சங்கிலி, துயில் கலைந்து எழுந்தபோது யாவும் உணரப்பெற்றவராய், தன் பாங்கியர்க்கு அதை எடுத்துரைத்தார்.

மறுநாள் திருக்கோயிலில் ஆரூரரைக் கண்டு சங்கிலியார் கூறியது, இங்கே சூளுரைத்தல் தகாது மகிழ மரத்தின் கீழ் யாம் சூளுரைப்போம் என்று ஆரூரர்க்குக் கூறவும், அதற்கு ஆரூரரும் சம்மதித்து இருவரும் மகிழ மரத்தின்கீழ் மரத்தை மும்முறை வலம் வந்து முன்பு கூறிய சூளுரையைச் செய்து கொடுத்தார் ஆரூரர். இச் செயலைக் கண்ட சங்கிலியார் இறைவனின் ஏவலால் ஆரூரர் இப்படிச் சூளுரை செய்ய நேர்ந்தமை, பாவியேன் அதைக் கண்டமை பற்றி வருத்தமடைந்ததாகவும் "ஏயர் புராணம்" கூறியுள்ளது. இறைவனின் ஏவலானது தன்பணி செய்தல் என்பதே என சங்கிலி நினைத்தார். இறைவனுக்கும் சுந்தரர்க்கும் இடையேயுள்ள தோழமை பற்றி விளக்க இதைவிட வேறு சான்று தேவையற்றது எனலாம்.

"அருள் நாளும் தர இருந்தீர் செய்தவாறு அழகு இது"
நீர் செய்தது மிகவும் அழகு!

-ஏயர் புராண வசனம் 262.

எனக் கூறப்பட்டது இகழ்ச்சிக் குறிப்பு உட்கொண்ட புகழ்ச்சி மொழியாகும். இக்கூற்று தோழமையால் கூறப்பட்டது என அறிஞர் கூறியுள்ளனர்.

இத்தோடு நிற்கவில்லை; இறைவன் தன் அடியார்களுக்குக் கனவில் தோன்றி இருவருக்கும் திருமணம் செய்விக்கும்படி கட்டளையிட, வானவரும், மண்ணவரும் கண்டு மகிழ ஆரூரர் - சங்கிலியார் திருமணம் நடைபெற்றது. சங்கிலியார் எனும் பெயர் சங்கிலிபோலத் தொடர்புள்ளவர் அவர் என்று பொருள்படும். அதன் காரணம், நிலவுலகில் பிறப்பதற்கு முன் கயிலையில் நிகழ்ந்த நிகழ்ச்சியின் உணர்ச்சி சங்கிலியாருக்கு இருந்தமை கூறப்பட்டுள்ளது.

மலையான் மடந்தை மலர்பாத
மறவா அன்பால் வந்த நெறி
தலையாம் உணர்வு வந்தனையத்
தாமே யறிந்த சங்கிலியார்.

-ஏயர்கோன் பாடல் 207.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு சேக்கிழார் குறித்துள்ளார். மிகுந்த காதலால் சூளுரைத்தாவது சங்கிலியாரைப் பெற்றுவிட வேண்டுமென்று கருதிய ஆரூரர் அவ்வாறு சூளுரை செய்தார்.

தீயதை நுகர்ந்து பார்த்த பின்னரே அதை விலக்குவர் ஒருவகை மனிதர். அதைப் போலவே இரு பெண்களை மணந்தமையால் அதை அனுபவித்துப் பின் விலக்கும் மனோபாவம் ஆரூரர்க்கு ஏற்பட்டிருத்தல் வேண்டும். சங்கிலியாரை மணந்தபின் தன் சூளுரையை மறந்து பரவையிடம் ஏகிய சம்பவம் ஆரூரரின் ஊழ்வினை விதி என அறிஞர் குறிப்பிட்டுள்ளனர். சங்கிலியாருக்குச் செய்து கொடுத்த சூளுரையும் ஊழ்வினைப் பயனாக வந்த காரியமே எனவும் கூறப்பட்டுள்ளது.

ஆரூரர் அனுபவித்த இன்பம் உலக மக்கள் அனுபவிக்கும் சிற்றின்பம் போன்றதல்ல. அது சிவயோகமாகிய பேரின்பத்துள் அடங்கி உடல் ஊழாகக் கழிந்த நிலையேயாகும். எனச் சேக்கிழார் பாராட்டுகின்றார்.

சங்கிலியாரைத் திருமணம் செய்து கொண்டமைக்கு சுந்தரர் காட்டும் அகச் சான்று பற்றிய தேவாரம் ஏழாம் திருமுறை செய்த நிகழ்ச்சி பின்வருமாறு அருளப்பட்டுள்ளது.

பொன்னவிழும் கொன்றையினாய்
போய் மகிழ்க் கீழ் 'இரு' என்று
சொன்னவனைக் காணாமே
சூளுறவு மகிழ்க் கீழே
என்னவல்ல பெருமானே.

-ஏழாம் திருமுறை.

தம்மால் காதலிக்கப்பட்ட சங்கிலியாரைத் தமக்குத் திருமணம் செய்வித்து அருள் புரிந்தமையை ஆரூரர் பின்வருமாறு அருளியுள்ளார்.

மான் திகழும் சங்கிலியைத்
தந்து வரு பயன்க ளெல்லாம்
தோன்ற அருள் செய்தளித்தாய்.

-ஏழாம் திருமுறை.

ஐம்புல இன்பங்களை சங்கிலியாருடன் ஆரூரர் நுகர்ந்த நிலையிலும் திருவருளாகிய பேரின்பத்தையே நுகர்ந்தார் என்பதைப் பின்வரும் பாடல் உணர்த்தும்.

ஓர்ந்தனன் ஓர்ந்தனன்
உள்ளத்துள்ளே நின்ற ஒண் பொருள்
சேர்ந்தனன் சேர்ந்தனன்
சென்று திருவொற்றியூர்ப் புக்குச்
சார்ந்தனன் சார்ந்தனன்
சங்கிலி மென்தோள் தடமுலை
ஆர்ந்தனன் ஆர்ந்தனன்
ஆமாத்தூர் ஐயன் அருளதே.

-ஏழாந் திருமுறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை

65

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 கடமையொன்றும்மைத் தடுக்கின்ற வேளையிலே
கடவுளைத்தான் வணங்காமல் விட்டாலும் வருந்தாதீர்
கடமையே கடவுளின் கட்டளை என உணர்ந்து
கட்டளையை நிறைவேற்றும் கடவுளுங்கள் அருகிருப்பார்.

02 போனவழி தவறாகிப் போனதென்று எண்ணிநீர்
ஆனவழி அனைத்தையுமே அவசரத்தால் மூடாதீர்
மாற்றுவழி எதற்குமே மானிலத்தில் உண்டென்று
நாலுநாள் பொறுத்திருப்பீர் நல்லவழி திறந்திடுமாம்.

03 கம்பியிலே மின்சாரம் கண்களுக்குத் தெரிவதில்லை
நம்பியதைக் கையாண்டால் நல்லொளி தருதல் போல்
எம்பெருமான் திருமேனி எமக்கும்தான் தெரிவதில்லை
நம்பியே தொழுதேத்த ஞானஒளி அவர் அருள்வார்.

04 என்வழி உன்வழி என்றுவழி தரம்பிரித்து
வெவ்வேறு வழிகளில் சென்றுநாம் வாழ்வதிலும்
மானிடம் வாழ்வதற்கு ஒரே வழிதான் என்றுணர்ந்து
அன்புவழி சென்றிடுவீர் அகிலத்தை வென்றிடலாம்.

05 உமக்கான ஒன்றைநீர் உமக்கென்று எடுக்கையிலே
பிறர்க்கான ஒன்றினையும் பிறரிடமே கொடுத்திடுவீர்
பிறர்க்கான ஒன்றினையும் நீர் பிறரிடமே கொடுக்காமல்
உமக்கான ஒன்றையும் நீர் உமக்கெடுத்தல் கெடுதலாகும்.

06 புகழ்தனைச் சுமப்பதற்கு புவிதனிலே சித்தமுள்ளோர்
பிறர்புகழைப் புகழுகின்ற பண்பினையும் பேண வேண்டும்
எல்லாப் புகழும் எந்தனுக்கே என்றிருப்பின்
புகழென்று நினைப்பதுவே பின் இகழ்வாக மாறிவிடும்.

*நீ எந்தவிதமான உலகத்தைப் பார்க்க விரும்புகிறாயோ அதுபோலவே மாறு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 சூடென்று கண்டிட்டால் குளிராக்க வழிசமைப்போம்
குளிரென்று கண்டிட்டால் சூடாக்க வழிசமைப்போம்
கோபமொன்று வந்திட்டால் அதைத்தணிக்கும் வழிவிடுத்து
கொடுங்கோபம் கொள்வதனால் லாபமுற்றோர் யாருளரோ.

08 குளம் வற்றிப்போனதென்று கொக்குகள் இருந்திடாமல்
தளம்விட்டுத் தளந்தாவிக் காலத்தை வெல்லுதல் போல்
அளந்தது இதுவேதான் என்றுமனம் தளர்ந்திடாமல்
உளம்கொண்டு உழைத்திடுவீர் உலகில்நீர் உயர்ந்திடுவீர்.

09 இருள் சூழ்ந்து விட்டதென்று வௌவால்கள் உறங்கிடாமல்
இருளுக்குள் வழிசமைத்தே இரை தேடி வாழ்தல்போல்
துயர்சூழ்ந்து விட்டதென்று துவண்டுநீர் வீழ்ந்திடாமல்
துயர்விடுத்துத் துடித்தெழுவீர் உயர்வுதனை எட்டிடுவீர்.

10 எழுந்தபோது விழுந்ததனால் எழுந்திடவே முடியாதென்று
தவழ்ந்த போது நினைத்திருந்தால் நடப்பதற்கு யாருமிரார்
விழுந்தபோதெல்லாம் எழுந்தெழுந்து முயற்சிப்பீர்
நடக்கின்ற போதுநீர் விழாதிருக்க வழியறிவீர்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செந்திவேல் மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செந்திவேல் மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| பா. செல்வக்குமார் | பிரான்ஸ் | 20000. 00 |
| திருமதி சி. நாகேந்திரன் | நல்லூர் | 20000. 00 |
| சி. சுப்பிரமணியம் | நல்லூர் (கனடா) | 5000. 00 |
| புதிய விஞ்ஞானக் கல்லூரி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| வசந்தா சோதிநாதன் | லண்டன் | 50 பவுன்ஸ் |
| S. குணரெட்ணம் குடும்பம் | மானிப்பாய் | 2000. 00 |
| செ. செல்வரட்ணம் | தெகிவளை | 2000. 00 |
| M. துவாரகன் | இணுவில் | 2000. 00 |
| கி. சுதா | இணுவில் | 5000. 00 |
| ம. யோகானந்தன் | லண்டன் | 5000. 00 |
| செ. ஜீவன் | புன்னாலைக்கட்டுவன் வடக்கு | 10000. 00 |
| ஈழமயில் | திருகோணமலை | 3000. 00 |
| அ. சம்மட்டியார் குடும்பம் | நாகர்கோவில் | 15000. 00 |
| க. விதுஷன் | நாகர்கோவில் | 3000. 00 |
| க. வைஷ்ணவி | நாகர்கோவில் | 3000. 00 |
| க. வைத்தியநாதன் | நீர்வேலி | 1000. 00 |
| ந. பரம்சோதி | வெற்றிலைக்கேணி | 2000. 00 |
| ந. பாக்கியலட்சுமி | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| S. கமலச்சந்திரன் | கொழும்பு- 06 | 10000. 00 |
| செல்வி பாலசுப்பிரமணியம் | கொழும்பு- 06 | 5000. 00 |
| பா. பாலபிரசாந்தன் | கொழும்பு- 06 | 2000. 00 |
| S. கணேசன் | கொழும்பு- 06 | 1000. 00 |
| நளினி வைகுந்தவாசன் | கொழும்பு | 3000. 00 |
| இ. சொக்கலிங்கம் ஆசிரியர் | நாவற்குழி | சி.ப. அரிசி, 10000. 00 |
| ர. மிதுசாலினி | தெல்லிப்பழை | 1மூடை அரிசி |
| த. சொக்கலிங்கம் | இணுவில் | 3000. 00 |
| J. ஜோசப் | யாழ்ப்பாணம் | 500. 00 |
| K. சிவலிங்கம் | கோயிற்கடவை | 500. 00 |
| பு. சிவகண்ணன் (நியூ லீலாவதி ஸ்ரோர்ஸ்) | கனடா (கைதடி) | 10000. 00 |
| J. ஆதிகா | இணுவில் | 1000. 00 |
| சு. டிஷா | லண்டன் | 1000. 00 |
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 50000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| திருமதி வி. பிரியா | அரியாலை | 1000. 00 |
| சித்திரவடிவேல் பவானி | சாவகச்சேரி | 2500. 00 |
| S. மகாராஜன் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| க. கிரிகரன் | சங்கானை | 1000. 00 |
| கி. பாலசுப்பிரமணியம் | அமெரிக்கா | 5000. 00 |
| நா. கனகலிங்கம் | கொக்குவில் | 2000. 00 |
| பொ. சிவச்செல்வன் | மீசாலை | 5000. 00 |
| வே. சண்முகம் | கைதடி | 1000. 00 |
| ச. கௌரிபாலன் | நயினாதீவு | 5000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் | பருத்தித்துறை | 10000. 00 |
| N. சண்முகநாதன் | இணுவில் கிழக்கு | 5000. 00 |
| தே. தினேஸ் | அச்சுவேலி | 1000. 00 |
| K. விஜயரட்ணம் | சுழிபுரம் | 2000. 00 |
| மு. கதிர்வேல் | சுழிபுரம் | 2000. 00 |
| திரு பாலசிங்கம் குடும்பம் | நீர்வேலி | 1500. 00 |
| நி. நிஷானி | அரியாலை | 2000. 00 |
| கே. ஹரீஸ் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| ஜெ. நந்தினி | ராமநாதபுரம் | 1000. 00 |
| ச. ஆதித்தன் | சுழிபுரம் | 1000. 00 |
| வே. தாண்டவமூர்த்தி | இணுவில் (பிரான்ஸ்) | 5000. 00 |
| திரு குகதாசன் குடும்பம் | சுவிஸ் | 5000. 00 |
| சி. லக்ஷிகி | திருநெல்வேலி | 1000. 00 |
| சோ. வனதாசன் குடும்பம் | திருநெல்வேலி | 1000. 00 |
| T. சண்முகவரதன் | தொண்டைமானாறு | 15000. 00 |
| மு. சிவதர்ஷன் | வல்வெட்டித்துறை | 15000. 00 |
| ச. சிவஈஸ்வரி | இணுவில் | 3000. 00 |
| கி. ஜெகதேவன் | இடைக்காடு (சுவிஸ்) | 20000. 00 |
| கி. தர்மலிங்கம் | புலோலி | 1000. 00 |
| க. குமரேசர் | வல்வெட்டித்துறை | 30000. 00 |
| ச. விதேஸ் | சிலாபம் | 3000. 00 |
| பெ. செல்லத்துரை | புத்தூர் | 1புட்டி அரிசி |
| க. கலாதேவி | ஜேர்மன் | 1000. 00 |
| இ. சுபாஸ்கரன் | லண்டன் | 6000. 00 |
| S. ஷஷ்டிப்பிரியா | கொழும்பு | 10000. 00 |
| ந. ரவீந்திரன் | கோண்டாவில் | 2000. 00 |

*சிந்திக்கத் தெரிந்தவனுக்கு ஆலோசனை தேவையில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வைஸ்ணவி நகை மாடம் | நெல்லியடி | 4புட்டி அரிசி |
| பீ. மங்களேஸ்வரி | மட்டக்களப்பு | 1000. 00 |
| V. விக்னேஸ்வரன் | புன்னாலைக்கட்டுவன் | 1000. 00 |
| மாதவன் அனுசியா | கரவெட்டி | 20000. 00 |
| திரு உதயகுமார் குடும்பம் | மாவிட்டபுரம் 2புட்டி அரிசி | 1460. 00 |
| வா. ரஜிக்குமார் | கோப்பாய் | 2000. 00 |
| தி. சிவலிங்கம் | கோவிற்கடவை | 500. 00 |
| K. ஜேசினி | நெல்லியடி | 1000. 00 |
| S. மிகிந்தலா | கரவெட்டி | 1000. 00 |
| த. ராஜதுரை | கொழும்பு | 2000. 00 |
| சி. தேவநேசன் | பிரான்ஸ் | 5000. 00 |
| பா. தேவசுரேந்திரன் | பிரான்ஸ் | 1000. 00 |
| திரு இராசலிங்கம் குடும்பம் | புலோலி | 25000. 00 |
| சி. காண்டீபன் | மயிலிட்டி | 1000. 00 |
| க. கர்ணானந்தன் | நவுக்கிரி | 4000. 00 |
| S. கந்தசாமி | வவுனியா | 1000. 00 |
| S. சுதாகரன் | திருநெல்வேலி | 25k சோயா |
| ந. நந்தகுமரன் | துன்னாலை | 4000. 00 |
| திரு நாகேந்திரம் | பண்டத்தரிப்பு | 500. 00 |
| கு. குணரூபன் | மீசாலை | 1000. 00 |
| சி. கவிதா | மட்டுவில் மரக்கறி, 2புட்டி அரிசி | 1000. 00 |
| சு. அபினேசன் | இணுவில் | 1000. 00 |
| தி. ரவீந்திரநாதன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| சி. கலையரசி | தாவடி சௌவ்வரிசி, சீனி, 1புட்டி அரிசி | |
| ந. கந்தசாமி நினைவாக | லண்டன் | 20000. 00 |
| மு. கனகசபாபதி | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| க. சுபாங்கி | வண்ணார்பண்ணை | 1000. 00 |
| S. பத்மாவதி | தாவடி | 1000. 00 |
| வா. ஜெயா | வியாபாரிமூலை | 1500. 00 |
| ச. பாலமுரளி | இணுவில் | 1000. 00 |
| லெனிஸ் வளவன், புவனப்பிரியா தம்பதியர் | திருநெல்வேலி | 15000. 00 |
| யோ. நிஷா | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| யோ. வீரமங்கை | காரைநகர் | 1000. 00 |
| வளர்மதி புடவையகம் | யாழ்ப்பாணம் 25000 பெறுமதியான பொருட்கள் வகையில் | |
| திரு ராமகிருஸ்ணர் | கரவெட்டி | 500. 00 |
| கா. செல்லத்துரை | உடுவில் | 15000. 00 |
| S. காஞ்சனா | இணுவில் | 1720. 00 |
| திரு கமலாகரன் | லண்டன் | 5000. 00 |

*விதைத்தவன் உறங்கலாம். ஆனால் விதைகள் ஒருபோதும் உறங்குவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| க. தினேஸ்குமார் | தெல்லிப்பழை | 10000. 00 |
| ம. நிஷாந்தன் | ஏழாலை | மரக்கறி 1மூடை அரிசி |
| திரு நடராஜா குடும்பம் | கல்முனை | 2000. 00 |
| கோ. சிவபாலலிங்கம் | அச்சுவேலி | 2050. 00 |
| க. சரஸ்வதி | இடைக்காடு | 1000. 00 |
| க. அனோஜன் | இடைக்காடு | 500. 00 |
| து. கபிஷன் | மந்திகை | 5000. 00 |
| தி. பிரசாந்தன் | ஆனைப்பந்தி | 5000. 00 |
| த. துவாரகி, த. பவீனா | இடைக்காடு | 1000. 00 |
| செ. நவரத்தினசாமி | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| S. சிற்சபேசன் | தெகிவளை | 5000. 00 |
| வி. தர்ஷன், வி. கிரிஷா | சண்டிலிப்பாய் | 5000. 00 |
| சி. தயாளன் | மாதகல் | 5000. 00 |
| கு. பத்மாவதி | கட்டைப்பிராய் | 1500. 00 |
| ச. ருக்மணிதேவி | கோப்பாய் மரக்கறி 1புட்டி அரிசி | 1000. 00 |
| க. குசலாதேவி | அளவெட்டி | 1000. 00 |
| R. துஷ்யந்தன் | சிலாபம் | 2000. 00 |
| க. டிருக்ஷன் | ஊர்காவற்துறை | 2000. 00 |
| திரு கனேந்திரன் குடும்பம் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| J. கிருஷ்டிகன் | மானிப்பாய் | 1000. 00 |
| T. மதுனா | சுண்டுக்குளி | 1000. 00 |
| சசிகலா மூலம் சச்சிதானந்தம் நினைவாக | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| தி. மங்களேஸ்வரி | புலோலி மத்தி | 10000. 00 |
| க. மங்கையற்கரசி | வதிரி | 2000. 00 |
| திரு தில்லைநாதன் குடும்பம் | கொழும்பு | 1000. 00 |
| திரு முருகானந்தன் குடும்பம் | கொழும்பு | 1000. 00 |
| வே. டினோஷன் | நெல்லியடி | 5000. 00 |
| S. சறோஜினிதேவி | மாவிட்டபுரம் | 500. 00 |
| M. செந்தூரன் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| க. அன்னலிங்கம் | காரைநகர் | 10000. 00 |
| கு. சயந்தன் | புன்னாலைக்கட்டுவன் | 1000. 00 |
| ந. தெய்வேந்திரராஜா | வல்வெட்டி | 1000. 00 |
| க. பாஸ்கரன் | லண்டன் | மரக்கறி 2மூடை அரிசி |
| சு. பிரம்மேந்திரன் | கோப்பாய் | 1000. 00 |
| செல்வி வி. நித்தியா | அவுஸ்திரேலியா | 5000. 00 |
| ரஜீவ் காயத்திரி | அவுஸ்திரேலியா | 5000. 00 |

(தொடரும்...

*தவறே செய்யாதவன் மனிதன் அல்ல. வாய்ப்பு கிடைத்தும் தவறு செய்யாதவனே மனிதன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் மேம்பட

– திரு சி. நற்குணலிங்கம் அவர்கள் –

ஒவ்வொருவருக்கும் உறவு வட்டம் என்பது உள்ளது. அது அவரவர்க்கு பெரிதுதான். மனிதருக்கு இருக்கும் விதம் விதமான தேவைகளை நிறைவு செய்வதற்காகவே விதம் விதமான உறவுகள் உருவாகின்றன. உடல் சார்ந்து, உணவு சார்ந்து, சமூகம் சார்ந்து, பொருளாதாரம் சார்ந்து, உலகியல் சார்ந்து மனிதனுக்கு எவ்வளவு தேவைகளுண்டோ அவ்வளவு உறவுகள் உருவாவது இயற்கை. ஒரு குறிப்பிட்ட உறவுமுறை அதற்குரிய தேவையை நிறைவுசெய்யாத பட்சத்தில் அந்த உறவு செயல் இழக்கிறது. ஒவ்வோர் உறவையும் நீங்கள் ஒவ்வொரு விதமாக கையாளவேண்டி இருக்கிறது. இப்போதைய சூழலில் பிறருடன் நீங்கள் கொண்டிருக்கும் உறவுகள்தான் உங்கள் வாழ்க்கையின் தன்மையைத் தீர்மானிக்கின்றது.

மேன்மையான உறவுகள் மலர, ஒரு மனிதன் உறவுகொள்வதற்காக இன்னொருவரை தேடுவதற்குமுன் தனக்குள் ஆழமாக பார்த்துக்கொள்ளவேண்டியது அவசியம். மனிதர்களுக்கு உறவுகள் வழியே சிக்கல்கள் தோன்றுவதும் சாதாரணம். அதில் முக்கியமாக அவர்கள் தங்கள் வாழ்வை மேம்படுத்திக்கொள்ள உறவுகளைப் பயன்படுத்திக்கொள்ளாமல் வாழ்க்கையில் இருக்கும் இடைவெளிகளை நிரப்புவதற்கே உறவுகளைப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். உங்கள் மகிழ்ச்சியும் ஆனந்தமும் உங்களைச் சார்ந்தே இருக்கும்போது உங்களைச் சுற்றி இருப்பவர்களுடன் அருமையான உறவுகளை உங்களால் வளர்த்துக்கொள்ள முடியும். நீங்கள் எப்போதும் ஆனந்தமாக இருந்தால் எல்லோரும் உங்களுடன் உறவுகொள்ளத்தான் விரும்புவார்கள். யாரிடமாவது எதையாவது கசக்கிப் பிழியவேண்டும் என்று நீங்கள் கருதினால் உங்களிடமிருந்து விலகியே இருக்க விரும்புவர்.

உங்கள் வாழ்வின் எல்லா அம்சங்களையும் நீங்களே கையாள முடியாது. உங்களைச் சுற்றி மனிதர்கள் வேண்டும். அதற்காகத்தான் உறவுகள். யாரிடமிருந்தும் அடிக்கடி நீங்கள் எதையாவது பெற்றுக்கொண்டே இருக்க விரும்பினால் உறவுகள் உங்களிடம் எச்சரிக்கையாக நடந்துகொள்வார்கள். இது மிகவும் துரதிஷ்டவசமானது. உறவுகளை இனிமையானவையாய் வைத்துக்கொள்வதும், சிக்கல்மிக்கதாய் உருவாக்கிக் கொள்வதும் உங்களைப் பொறுத்துத்தான் இருக்கிறது. நெருக்கமானவர்கள் என்றால் அவர்களுடன் மனத் தடைகள் உடைந்திருக்க வேண்டும். நெருக்கமானவர்களாயினும் சிலர் மனத்தடைகளை மனதுக்குள் புதைத்து வைத்திருப்பர். சந்தர்ப்பம் வரும்போது தெறிக்கவிடுவர். எவ்வாறாயினும் உறவுகளை வளர்த்துக்கொள்ளாமல் இருப்பதென்பது சாத்தியமில்லை.

உடல்சார்ந்து, உணர்வுசார்ந்து, மனம்சார்ந்து ஏற்படும் நிர்ப்பந்தங்கள் சில உறவுகளை உருவாக்கி வருகின்றன. இந்தச் சூழலில் உங்கள் வாழ்க்கை எந்த நேரத்திலும் நொருங்கிப் போகக்கூடிய அபாயத்தில்தான் இருக்கிறது எனலாம். பெரும்பாலானவர்க்கு உறவுகள் ஆரம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் மகிழ்ச்சியைத் தருகின்றன. இறுதியில் வீழ்ச்சியை தருகின்றன. சிலருக்கு ஆரம்பத்தில் உறவுகள் கசப்பாகவும், இறுதியில் கரும்பாகவும் இருப்பதும் உண்டு. எவ்வாறாயினும் உறவுகள் மேம்படுவதே உறவுக்குச் சிறப்பு. நெருங்கிய உறவுகளே உங்களை நெருக்குகிற உறவுகளானால் அந்த உறவுகள் விழிப்புணர்வுடனோ, விருப்பத்துடனோ தேர்வு செய்யப் படவில்லை என்று பொருள். நீங்கள் தனித்தன்மைமிக்க மனிதராய் இருந்தால் உங்களால் நல்ல உறவுகளை அணைத்துக்கொள்ள முடியும்.

வாழ்க்கை என்றால் நல்ல பிணைப்பு இருக்கவேண்டும். வாழ்க்கை என்பது எல்லோரும் கூடி வாழ்வதுதான். எல்லோரையும் அனுசரித்து நடந்துகொள்வதுதான். தனிமனித உழைப்பு, தனித்திறன் மட்டுமே முழுமையான வாழ்க்கையை வழங்கிவிடாது. இவர் நல்லாய் இருக்க வேண்டும், நீண்ட ஆயுளுடன் வாழவேண்டும், இவர் அன்பு எமக்கு தொடர்ந்து கிடைக்கவேண்டும். இவருக்காக நான் எதுவும் செய்வேன், இவர்தான் மனிதன் என்று சொல்லும் அளவுக்கு மனிதர்களைச் சம்பாதிக்க வேண்டும். எவரிடமிருந்தும் நம்பிக்கையையும், அன்பையும் கட்டாயப் படுத்த முடியாது. அது தானாக வரவேண்டும். வரவழைக்கும் விதமாக நாம்தான் நடந்துகொள்ள வேண்டும். நாம் மற்றவர்களுடன் நடந்துகொள்ளும் முறைதான் எம்முடன் மற்றவர்கள் இணையக் காரணமாகும். எல்லோரையும் சமமாக மதித்து, மக்களைக் கையாளும் திறன் இருந்தால் மக்கள் எல்லோரும் எம் பக்கம். மக்களை சரியாகப் புரிந்துகொண்டு அனுசரித்துப் போகும் திறன் இருந்தால் வெற்றி நிச்சயம், நிம்மதி நிச்சயம், உறவுகள் மேம்படுவதும் சாத்தியம்.

உறவுகள் மேம்பட முதலில்தேவை விட்டுக்கொடுப்பதுதான். பின் உதவி, அன்பளிப்பு, குடும்ப நிகழ்வுகளில் பங்கேற்பது, அடிக்கடி சந்திப்பது, நலம் விசாரிப்பது, வெளியூர், வெளிநாடுகளில் இருந்தாலும் தொலைபேசியில் பேசுதல் ஆகும். சிலவேளைகளில் உறவுகள் சுமையாக மாறினாலும் உறவுகள்தான் மனிதனின் பலமே! ஆபத்துக்களில் கைகொடுக்க, துயரங்களில் ஆறுதல் அளிக்க, இன்ப துன்பங்களில் உரிமையோடு பங்கெடுக்க உறவுகள் வேண்டும். உறவுகளுக்குள் சிறிய பிரச்சினை வந்து கதைக்காமல் இருக்கும் வேளையில் யார் முதலில் கதைப்பது என்று காலம் தாழ்த்தாது ஒருவர் முன்வரவேண்டும். இல்லையேல் கதைப்பதற்கு காலம் எடுக்கும். அவர் பேசினால்தான் நானும் பேசுவேன் என்று பதிலுக்கு பதில் உறவாடுவது உறவை மதிப்பதாகாது.

வாழ்க்கை எப்போதும் நேர்கோடாக இருப்பதில்லை. வாழ்வை நடத்துவதற்கென்று எத்தனையோ விஷயங்களை நீங்கள் செய்யவேண்டி இருக்கிறது. உங்கள் புரிதலை நீங்கள் கைவிட்டால் உங்கள் செயல்திறனை நீங்கள் இழக்க நேரிடும். மனிதன் தன் அறிவியல், ஆற்றல்மூலம் வசமாக்கிக்கொண்டான். ஆனால் இனிமையாக்கிக்கொள்ளத் தவறிவிட்டான். இனிய வாழ்க்கைக்கு சுமூகமான உறவு அவசியம்.

உறவுகள் மேம்பட; நிறைகளை மனதார பாராட்டுங்கள். புன்முறுவலுக்கு பின் வாங்காதீர்கள். அன்புச் சொற்களைப் பயன்படுத்துங்கள். அற்ப விஷயங்களை பெரிது படுத்தாதீர்கள். மனந்திறந்து பேசுங்கள். மற்றவர்களைவிட உங்களை உயர்வாக நினைத்து கர்வப்படாதீர்கள். எதிர்த்தரப்பினரை மன்னிக்க வழியிருக்கிறதா எனப் பாருங்கள். எந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஷயத்தையும் நேர்மையாகக் கையாளுங்கள். தவறு செய்தால் உடனே மன்னிப்புக் கேட்பதைக் கௌரவமாகக் கருதுங்கள். தாழ்வு மனப்பான்மையை விடுங்கள். பொறாமை வேண்டவே வேண்டாம். சம்பந்தம் இல்லாமலும், அர்த்தமில்லாமலும், பின்விளைவு அறியாமலும் பேசவேண்டாம். மற்றவர்களை தவறாகப் புரிந்துகொள்ளாதீர்கள். நடுநிலை தவறாதீர்கள். அளவுக்கு அதிகமாக எதிர்பார்ப்பு வைக்காதீர்கள். தேவைக்கு அதிகமாக ஆசைப்படாதீர்கள். சில சங்கடங்களை சகித்துத்தான் ஆகவேண்டும் என உணருங்கள். தெரியாததைப் பேசாதீர்கள். பிடிவாதக்குணம் வேண்டாம். மற்றவர்களுக்கு மரியாதை உண்டு என்பதையும் மறவாதீர்கள். முடிந்தவரை விட்டுக்கொடுங்கள் நீங்கள் ஆரோக்கியமாக, ஆசீர்வாதமாக மகிழ்வாக வாழலாம். உறவுகளிடம் குறைகாணும்போதெல்லாம் நாம் அவர்களின் நற்செயல்களை பார்க்கத் தவறிவிடுகிறோம். பிறர் நினைப்பதைவிட பிறர் இதைத்தான் நினைப்பார்கள் என்று நாம் நினைப்பதுதான் பெரும்பாலும் தவறாகி உறவுகளை பிரிக்கிறது. நம் மன அமைதியைக் குலைக்கிறது. தவறான நம்பிக்கைகளும், அனுமானங்களும் பிரச்சினைகளுக்கு காரணமாகி விடுகிறது. நம்மைச் சுற்றியிருக்கும் மக்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ளாமல் நாம் சாதிப்பவை எல்லாம் சாதனைகளாக பதிவு செய்யப்படமாட்டாது. எம்முடன் பலர் பயணம் செய்வதற்கு உறவுகள் மேம்படும்வண்ணம் எம் நடத்தைகளில் மாற்றம் வேண்டும்.

## உன்னருளை தந்திடுவாய்...

பூவரச மரத்தடியில்
பூர்வீகம் கொண்டவனே!
துன்பம் என்று வந்தோர்க்கு
துயர் தீர்க்கும் வேலவனே!

பசித்து வருவோர்க்கு
புசிக்கக் கொடுப்பவனே!
அன்னதான கந்தனே
ஆற்றங்கரை வேலவனே!

பாலர் மனதை தொட்ட
பால முருகா!
உன் சுந்தரவதனம் கண்டு
சொக்கி நிற்போர் ஏராளம்.

தேடி வந்த பக்தர்க் கெல்லாம்
கேட்ட வரம் தந்திடுவாய்
ஓடி வந்தேன் உன் சந்நிதிக்கு
உன்னருளை தந்திடுவாய்!

- த். அமுதாலம் -

சிக்கல்களை எதிர்கொள்ளும்போது கூடவே பல திறமைகளும் வெளிப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகுண்ட ஏகாதசி

*– திரு ஆர்.வீ. கந்தசுவாமி* அவர்கள் –

காயத்திரியைக் காட்டிலும் சிறந்த மந்திரம் இல்லை, தாயை விஞ்சிய தெய்வம் வேறு இல்லை, காசியை விஞ்சிய புண்ணியதீர்த்தம் வேறு இல்லை, ஏகாதசியை விஞ்சிய வேறு விரதம் இல்லை.

இதனால்தான் நாராயணீயம் பாடிய நாராயண பட்டத்திரி கலிகாலத்தில் எளிதில் இறைவன் அருளைப் பெற ஏகாதசி விரதமும் ஒன்றாகும் எனக் கூறியுள்ளார். ஓர் ஆண்டில் இருபத்துநான்கு பட்சங்கள் வருவதால் 24 ஏகாதசிகளும் சில ஆண்டுகளில் 25 ஏகாதசிகள் வருவதாகக் கணக்கிட்டுள்ளனர். இந்த 25 ஏகாதசிகளும், மனித குலத்தை உயர்த்துவதற்காக ஏற்பட்டிருந்தாலும் மார்கழி மாத சுக்கிலபட்ச ஏகாதசியாகிய வைகுண்ட ஏகாதசி தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். மாதங்களில் நான் மார்கழியாக உள்ளேன் என்ற கீதாசாரியனின் வாக்கும் இங்கே நினைக்கத்தக்கது.

இந்த ஏகாதசியை முக்கோட்டை ஏகாதசி என்றும், மோட்ஷ ஏகாதசி என்றும் சிறப்பித்துக் கூறுவர். முன்று கோடி ஏகாதசிகட்கு சமம் என்பதால் "முக்கோடி" என்ற சொல் காலப்போக்கில் மாறி முக்கோட்டை ஆயிற்று.

ஒவ்வொரு திதிகளுக்கும் உரிய தேவதைகளை நம் முன்னோர்கள் வகுத்துள்ளனர். முதல் திதியாகிய பிரமைக்கு உரிய தேவதை அக்கினி. இரண்டாம் திதியாகிய துவிதிதைக்கு உரியவன் பிரமன் மூன்றாவதான திரிதிதைக்கு உரியவள் பார்வதி, அதுபோன்று பதினோராவது ஏகாதசிக்கு உரிய தேவதை தர்மம் ஆகும். அதனால் இந்த திதியை தர்மதிதி எனக் கூறுவர்.

ஏகாதசி, திதியின் பெருமையைப் புராணங்கள் பலவாறு கூறுகின்றன. திருமால் தேவர்களின் வேண்டுகோளை ஏற்று முரன் என்ற அசுரனை அழிக்கச் சென்றார். பல்லாண்டுகள் அவனுடன் போரிட்டார். அவனை அழிக்க முடியாமல் "பதரிகாச்ரமம்" சென்று ஒரு குகையில் படுத்துவிட்டார். திருமாலை தேடி வந்து அசுரன் அவர் உறங்குவதைப் பார்த்து தாக்கத் தொடங்கினான். அப்போது பெருமானின் உடலிலிருந்து ஒரு மகத்தான சக்தி பெண் வடிவத்தில் வெளிவந்து அசுரனை மாய்த்தது. அதனால் எம்பெருமான் மகிழ்ந்தார். அவள் வேண்டியவண்ணம் அந்நாளில் விரதம் இருப்போர்க்கு அவர்களுக்கு இம்மையிலும் மறுமையிலும் நல்லனவற்றையே அருள்வதாகக் கொடுத்த வரமே ஏகாதசி விரதத்தின் உயர்வுக்கு காரணமாயிற்று.

திருமாலின் அவதாரமான ஸ்ரீ ராமனே பங்குனி மாதத்தில் "விஜயா" என்று பெயர் பெற்ற ஏகாதசி விரதம் இருந்து அதன் பின்பே கடலைக் கடந்து இலங்கையை வென்றார் என்று புராணம் கூறுகின்றது.

மேலும் பீமன் ஓர் ஆண்டு முழுவதும் இந்த விரதத்தைச் செய்ய முடியாத நிலையில் ஆனிமாத சுக்கிலபட்ஷ ஏகாதசியாகிய "நிர்ஜலா" என்ற விரதத்தை மட்டுமே நிறைவேற்றி ஓர் ஆண்டின் முழுப்பயனையும் பெற்றதை பத்மபுராணம் கூறுகின்றது.

*நம்பிக்கை வெற்றியோடு வரும் ஆனால் வெற்றி நம்பிக்கை உள்ளோரிடம் மட்டுமே வரும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாற்கடலில் மந்தரமலையை மத்தாக நாட்டி வாசுகி என்ற பாம்பை கயிறாகச் சுற்றி எம்பெருமான் அமுதம் கடைந்து எழுந்த ஒப்பற்ற நாள் வைகுண்ட ஏகாதசியே ஆகும். மேலும் கீதையை எம்பெருமான் பார்த்தனுக்கு இதே நன்நாளில் உபதேசித்தான் என்பது இந்த நாளின் பெருமையைப் பறைசாற்றுகின்றது அல்லவா?

ஏகாதசி விரதமானது இம்மையில் நிலைத்த புகழ், நோயற்ற வாழ்வு, நன்மக்கட் பேறு முதலியவற்றை அளிப்பதோடு, மறுமையில் எம்பெருமானுக்கு ஒப்பான வடிவத்தையே அளித்து, பேரின்பத்தையும் வழங்கும் என்பது உறுதி.

வைகுண்டப்பேற்றை எளிய மக்களும் பெறும் வாய்ப்பை, வைகுண்ட ஏகாதசி அளிக்கிறது. ஆகவே இந்துசமய விரதங்களில் ஏற்றம்மிக்க ஏகாதசி நாளைப் போற்றி விரதம் காத்து பெருவாழ்வு பெறுவோமாக.

## பசி போக்கிய பரமன்

சிவனும் விஷ்ணுவும் ஒருவரே. வேறு வேறானவர்கள் அல்ல என்பதை உணர்ந்த மகான்கள் பலர். அவர்களுள் கும்பகோணம் திருவிசநல்லூர் ஸ்ரீதரஐயாவாள் முக்கியமானவர். இவரது முன்னோர் மைசூர் அரண்மனையில் பணி செய்தவர்கள். அங்கிருந்த வீடு, நிலங்களை தானமளித்துவிட்டு இங்கு குடியேறியவர்கள். தந்தையின் தர்ப்பண நாளில் வீட்டுக் கிணற்றில் கங்கையை வரவழைத்து அற்புதம் நிகழ்த்தியவர். இப்போதும் கார்த்திகை மாதம் அமாவாசையன்று அந்த அதிசயம் நிகழ்வதைக் காணலாம்.

இவர் தினந்தோறும் திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமி திருக்கோயிலுக்குச் சென்று வழிபடுவதை வழக்கமாக வைத்திருந்தார். அதன் பிறகே உணவு அருந்துவார். ஒரு நாள் சூறாவளியுடன் பெய்த மழையால் கோயிலுக்குப் போகமுடியாத அளவிற்கு வழியெங்கும் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. சிவபெருமானை இன்று தரிசிக்க முடியவில்லையே என்ற வருத்தத்தில் வீட்டுத் திண்ணையில் படுத்து உறங்கிவிட்டார்.

நள்ளிரவில் கோயில் அர்ச்சகர் வந்து "ஸ்ரீதரா... ஸ்ரீதரா... என அழைத்து சுவாமி பிரசாதம் பார்க்காமல் சாப்பிடமாட்டாயே இந்தா பிரசாதம்" என்றார் அர்ச்சகர். அவரைத் தனது வீட்டிற்குள் அழைத்துச் சென்று இருவரும் சாப்பிட்டனர். குளிரில் நடுங்கும் அவருக்கு கம்பளி ஒன்றை கொடுத்துப் போர்த்திவிட்டு உறங்கச் செய்தார். மறுநாள் கோயிலுக்குச் சென்ற ஸ்ரீதரஐயாவாள் "ஏன் சொல்லாமல் எழுந்து வந்தீர்கள்" என அர்ச்சகரிடம் கேட்டார். "நான் எப்போது உம்முடைய வீட்டிற்கு வந்தேன். நேற்றிரவு பெய்த பெருமழையில் நான் எங்குமே செல்லவில்லையே" என பதில் சொன்னார் அர்ச்சகர்.

அப்படியானால் அர்ச்சகர் வடிவில் வந்து நேற்றிரவு என் பசியை போக்கியது திருவிடைமருதூர் மகாலிங்கசுவாமியே என்பதை உணர்ந்தார் ஸ்ரீதரஐயாவாள். சிவபெருமானின் கருணையை நினைத்து கண்ணீர்மல்க மீண்டும் அவரை வணங்கச் சந்நிதிக்குச் சென்றார்.

ஏற தேறும் இடைமருது ஈசனார்
கூறு வார்வினை தீர்க்கும் குழகனார்
ஆறு செஞ்சடை வைத்த அழகனார்
ஊறி ஊறி உருகும் உன் உள்ளமே.

திருவிடைமருதூர் மகாலிங்க சுவாமியை பயன் தெரியாமல் ஒருவர் வழிபாடு செய்வாரேயானால் அவர் செய்த பஞ்சமா பாதகங்கள் அகலும்.

*உன்னை வெறுப்பவர்களுக்கு உன் புன்னகையால் பதிலளி.*

# பிள்ளையார் பாடல்

பிள்ளைத்தமிழ் பாட வந்தோம் பிள்ளையாரப்பா
பிழைகள் வாராமற் காத்திடுவாய் பிள்ளையாரப்பா
தெள்ளுதமிழ்ச் சொல்லெடுத்துப் பிள்ளையாரப்பா
வள்ளல் பிரானைத் தொழுவோமே பிள்ளையாரப்பா.

ஆற்றங்கரையிற் காவலப்பா பிள்ளையாரே - நீர்
அரசமரத்தடியிலும் காவலப்பா பிள்ளையாரே
ஆலமரத்தடியிற் காவலப்பா பிள்ளையாரே - நீர்
அகிலமெங்கும் காவலப்பா பிள்ளையாரே.

மருதடியில் மகிழ்ந்திருக்கும் பிள்ளையாரப்பா
அருளாசி வழங்கிடுவீர் பிள்ளையாரப்பா
திருவோடு ஏந்தினாலும் பிள்ளையாரப்பா
குருவாக்குப் பேணி நிற்போம் பிள்ளையாரப்பா.

அறுகெடுத்து மாலைகட்டிப் பிள்ளையாரப்பா
ஆறுதல் கேட்டு வந்தோம் பிள்ளையாரப்பா
ஓடியோடி அலைகின்றோமே பிள்ளையாரப்பா
ஓரிடத்தில் அமர வைப்பாய் பிள்ளையாரப்பா.

வெள்ளை மனப் பிள்ளைகட்குப் பிள்ளையாரப்பா
வேதாந்தம் அருள்வாயே பிள்ளையாரப்பா
கள்ளமில்லா உள்ளமதில் பிள்ளையாரப்பா
களிப்பூட்டி யருள்வாயே பிள்ளையாரப்பா.

மருதடியானின் திருவடி தொழுதாலே
மாயை விலகிவிடும் மயக்கம் தெளிந்துவிடும்
விரும்பித் தொழுமடியார் வினைகளைப் போக்கிடக்
கருதியே அருள் புரிவாய் மருதடி விநாயகனே.

ஓமென்ற ஓசையுடன் பிள்ளையாரப்பா
ஓங்கி மணி ஒலிக்க வேண்டும் பிள்ளையாரப்பா
தானென்ற செருக்கறுத்துப் பிள்ளையாரப்பா
பாங்குடனே வாழவைப்பாய் பிள்ளையாரப்பா.

*-திருமதி பரமேஸ்வரி நடராஜா-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: DOP/NEWS/103/2023

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org